# லெனின்

## சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியும்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி. இ. லெனின்

# சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியும்

NORWAY
SIGNATURE
SEELAN BOOKS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: ஆ. சுப்பிரமணியன்

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1982

Л $\frac{10102-585}{014(01)-82}$ 682—82 0101020000

## பொருளடக்கம்


பதிப்பாளர் முன்னுரை . . . . . . . . . . . 5
சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியும்
1 . . . . . . . . . . . . . . . . 8
2 . . . . . . . . . . . . . . . . 13
3 . . . . . . . . . . . . . . . . 17
பதிப்பாளர்க் குறிப்புகள் . . . . . . . . . 29
பெயர் குறிப்பகராதி . . . . . . . . . . 37

## பதிப்பாளர் முன்னுரை

உலக ஏகாதிபத்தியப் போர் 1914ம் ஆண்டு ஜூலை மாதம் 19 (ஆகஸ்டு 1)ம் தேதி தொடங்கி நான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. அது இரு ஏகாதிபத்தியப் பேரரசு கோஷ்டிகளுக்கிடையே, காலனிகளையும் செல்வாக்கு வட்டாரங்களையும் மறுபிரிவினை செய்வதற்காகவும் மற்ற மக்களினங்களைக் கொள்ளையிட்டு அடிமைப்படுத்தவும் நடைபெற்ற போராகும். ஆஸ்திரிய-ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகளடங்கிய கோஷ்டி, ஜெர்மன் ஏகாதிபத்தியத்தால் தலைமை தாங்கப்பட்டது. ஜாரின் ருஷ்யா உறுப்பு நாடாக இருந்த அடுத்த கோஷ்டி (ஆன்டான்ட்) பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளால் தலைமை தாங்கப்பட்டது. பின்னல் இத்தாலி, ஜப்பான், ஐக்கிய அமெரிக்க நாடுகளும் மற்ற நாடுகளும் இந்த ஆன்டான்டுடன் சேர்ந்தன. இந்தப் போரில் 28 நாடுகளைச் சேர்ந்த 150 கோடி மக்கள் ஈடுபட்டனர்.

ஆளும் வர்க்கங்கள், முதலாளிகள் மற்றும் நிலவுடைமையாளர்கள், மக்களினங்களிடையே இந்தப் போரை நியாயப்படுத்தவும், போரிடுகிற நாடுகளின் தொழிலாளிகளிடையே பிளவை உண்டாக்கி, ஒருவரின் மீது மற்றவரை ஏவிவிடவும் எல்லா வகை சித்தாந்தங்களையும் நாடினர்கள். ஒவ்வொரு நாட்டு முதலாளித்துவக் கட்சிகளும் குட்டி முதலாளித்துவக் கட்சிகளும் இது ''நாட்டை இரட்சித்தல்'' என்ற பெயரில் தொடுக்கப்பட்ட, நாட்டைக் காக்கும் போர் என்று கூறி போரின் உண்மையான குறிக்கோள்களை மறைத்து மக்களை ஏமாற்றின; தாய்நாட்டைக் காக்க வரும்படி மக்களுக்கு அழைப்புவிட்டன.

போரின் சாரத்தையும் உண்மையான குறிக்கோள்களையும் அம்பலப்படுத்தி, தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசிய

ஐக்கியத்தைப் பாதுகாத்து, போருக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக உழைப்பாளி மக்களை எழச் செய்வது என்ற பணி சோஷலிஸ்டுக் கட்சிகளை எதிர்நோக்கி இருந்தது. போரின் போது சோஷலிஸ்டுகள் கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரங்களை, 1907ல் ஷ்டுட்கார்ட்டிலும் 1910ல் கோப்பன்ஹேகனிலும் 1912ல் பாஸெலிலும் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்ட் காங்கிரஸ்களின் தீர்மானங்கள் நிர்ணயித்தன. வர இருந்த போரை ஏகாதிபத்தியப் போர் என்று அத்தீர்மானங்கள் சுட்டிக் காட்டி, போரினால் உருவாக்கப்பட்ட பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி எறிவதற்கான புரட்சிக்குப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தின.

எவ்வாறுயினும், போர் தொடங்கியதும் சோஷலிஸ்டுக் கட்சிகளின் மற்றும் இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் பெரும்பாலர், அவர்களே எடுத்த இந்தத் தீர்மானங்களை மறந்து, அவரவர் நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்து கொண்டு, போரை ஆதரிக்கலாயினர். இதனால் அவர்கள் தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகம் செய்தார்கள். ஜெர்மன் மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகள் போர் கடன்களுக்கு ஆதரவாக வாக்களித்தனர். பெல்ஜியம் மற்றும் பிரெஞ்சு நாட்டு சோஷலிஸ்டுகள் ஏகாதிபத்திய அரசாங்கங்களில் பதவி வகிக்க இணங்கினார்கள். ருஷ்யாவிலுள்ள மென்ஷிவிக்குகளும்* போரை ஆதரித்தனர். சோஷலிஸ்டுக் கட்சிகளின் தலைவர்கள், முதலாளித்துவத் தேசியவெறி கோஷங்களையே திருப்பிக் கூறினார்கள், போரை நியாயப்படுத்தினார்கள், மக்கள் திரளினரை, போர் நடக்கும் பொழுது வர்க்கப் போராட்டத்தை நிறுத்தும்படி அழைப்பு விடுத்தனர். வி. இ. லெனின் குறிப்பிட்டபடி, பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகளின் சோஷலிஸ்டுகளால் எடுக்கப்பட்ட அந்த வெட்ககரமான, துரோக நிலைமைக்கான பொறுப்பு முதலாவதாக ஜெர்மன் சமூக-ஜனநாயக கட்சியைச் சார்ந்தது. அக்கட்சிதான் இரண்டாவது அகிலத்தின் வலிமை மிக்கதும் மிக செல்வாக்குடை

---

* ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கைச் சார்ந்தவர்கள்.

யதுமான கட்சியாகும். அது சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தில் பிரதானப் பாத்திரம் வகித்தது. மிகப் பெரிய நாடுகளின் சோஷலிஸ்டுத் தலைவர்களின் துரோகம் காரணமாக சோஷலிஸ்டுக் கட்சிகளால் போர் பிரச்சினை பற்றி சரியான நிலையை எடுக்க இயலவில்லை, முதலாளித்துவத் தேசியவாதம் மற்றும் தேசியவெறியை எதிர்த்து நிற்க முடியவில்லை. இரண்டாவது அகிலம் தோல்வி அடைந்து வீழ்ந்தது.

அந்த நேரத்தில் லெனினால் தலைமை தாங்கப்பட்ட போல்ஷிவிக்குகள்* மட்டுமே போரைக் குறித்து சரியான புரட்சிகர நிலையை மேற்கொண்டார்கள். லெனினின் பிரேரணைப்படி, ஷ்டுட்கார்ட் சோஷலிஸ்டுக் காங்கிரசின் இராணுவவெறி மற்றும் சர்வதேச மோதல்கள் பற்றிய தீர்மானங்களில், ஏகாதிபத்தியப் போர் மூளும் பொழுது இதனால் உருவான நெருக்கடியை சோஷலிஸ்டுப் புரட்சியின் நலன்களுக்குப் பயன்படுத்தவேண்டும் எனும் மிகவும் முக்கியமான பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. முதல் உலகப் போர் தொடங்கியதும் வி. இ. லெனினால் தலைமை தாங்கப்பட்ட போல்ஷிவிக் கட்சி போருக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்திற்குத் தலைமை தாங்கியது.

சமூக-தேசியவெறி, இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதக் கட்சிகள் மார்க்சியத்திற்கு துரோகம் இழைத்தல் ஆகியவை முனைப்பாக இருந்த காலகட்டத்தில் மார்க்சியத் தத்துவத்தைக் கொச்சைப்படுத்தல், திரித்துக் கூறல் ஆகியவற்றை எதிர்த்து புரட்சிகர மார்க்சியத் தத்துவத்தைப் பாதுகாப்பதில் வி. இ. லெனின் விட்டுக் கொடுக்காத போராட்டத்தைத் தொடுத்தார். **சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியும்** என்ற அவருடைய இந்தக் கட்டுரை இதற்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இது 1916 ஆரம்பத்தில், ஏகாதிபத்தியப் போர் முழு மூச்சில் நடைபெற்ற காலத்தில் *Vorbote* என்ற ஸிம்மர்வால்டு இடதுசாரி சஞ்சிகைக்கு எழுதப்பட்டது. அங்கே இது அதே 1916 ஜனவரியில் வெளியிடப்பட்டது.

---

* ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் உறுதியான புரட்சிகரப் போக்கைச் சார்ந்தவர்கள்,

## சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியும்

### 1

இரண்டாவது அகிலம்[1] உண்மையிலேயே இல்லாமல் போய்விட்டதா? காவுத்ஸ்கி, வண்டர்வேல்டே போன்ற மிகுந்த செல்வாக்குள்ள அதன் பிரதிநிதிகளால் பிடிவாதமாக இது மறுக்கப்படுகிறது. அவர்களுடைய கருத்துக் கோணத் தின்படி தொடர்புகளின் முறிவைத் தவிர உண்மையில் ஒன் றும் ஏற்படவில்லை. எல்லாம் சரியாக உள்ளன.

விஷயத்தின் உண்மையை ஆராய்ந்தறிய நாம் 1912ம் ஆண்டு பாஸெல் காங்கிரசின் அறிக்கையைப் பார்ப்போம். அது குறிப்பிட்ட வகையில் தற்போதைய ஏகாதிபத்திய உலகப் போருக்குப் பொருந்துகிறது, உலக சோஷலிசக் கட்சி கள் எல்லாவற்றுலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தத்து வார்த்த வகையில் ஒவ்வொரு போரையும் ஸ்தூலமாக, வர லாற்று ரீதியாக ஒரு மதிப்பீடு செய்வதன் அவசியத்தை, எந்தச் சோஷலிஸ்டும் மறுக்கத் துணிய மாட்டார்.

இப்பொழுது போர் தொடங்கி விட்டது. எல்லோரு மறிந்த சந்தர்ப்பவாதிகளோ, காவுத்ஸ்கிவாதிகளோ பாஸெல் அறிக்கையை மறுக்கத் துணிய மாட்டார்கள். அல்லது போரின் போது சோஷலிசக் கட்சிகள் எப்படி நடக்க வேண் டும் எனும் கோரிக்கைகளுடன் இதை ஒப்பிட மாட்டார்கள். ஏனெனில் இரண்டையும் அந்த அறிக்கை முழுமையாக அம்பலப்படுத்துகிறது.

பாஸெல் அறிக்கையில் தாய்நாட்டைப் பாதுகாப்பது பற்றி, அல்லது ஓர் ஆக்கிரமிப்புப் போருக்கும் ஒரு பாது காப்புப் போருக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லே. ஜெர்மன் நாட்டையும் நால்வர் ஒப்பந்தத்தையும்[2] சார்ந்த சந்தர்ப்பவாதிகளும் காவுத்ஸ்கி வாதிகளும்* உலகளவில் எதை எங்கெங்கும் பறைசாற்றிக்

---

* இது ஜெர்மனியில் காவுத்ஸ்கியைப் பின்பற்றி வரும்

கொண்டிருக்கிறார்களோ அந்த விஷயத்தைப்பற்றி அதில் ஒன்றுமில்லை. அது போன்ற எதையும் அறிக்கை சொல்லியிருக்க முடியாது. ஏனெனில் அது என்ன சொல்லுகிறதோ அது இத்தகையக் கருத்துக்களை உபயோகிக்க முடியாது என்று முழுமையாகத் தள்ளிவிடுகிறது. தற்போதைய போருக்கான அடித்தளத்தைப் பல ஆண்டுகளாகத் தயார் செய்து கொண்டிருந்ததும் 1912ல் மிகத் தெளிவாக வெளிப்படையானதும் 1914ல் போரை ஏற்படுத்தியதுமான தொடர்ச்சியான ஓர் உயர்ந்த ஸ்தூலமான அரசியல் பொருளாதார முரண்பாட்டை அது குறிக்கிறது. ''பால்கனில் தலைமை நிலைக்கான ருஷ்ய-ஆஸ்திரிய மோதல்; ''ஆசியா மைனரில் நாடுபிடிக்கும் அவற்றின் கொள்கைக்கான'' பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனிக்கு (இந்த நாடுகள் எல்லாவற்றிற்கும்) இடையிலான மோதல்கள்; அல்பேனியாவில் ''ஆதிக்கம் செலுத்துவதற்கான முயற்சிக்காக'' ஏற்பட்ட ஆஸ்திரிய-இத்தாலி மோதல் இத்தியாதிகளை அந்த அறிக்கை நினைவூட்டுகிறது. சுருக்கமாக அந்த அறிக்கை இவை எல்லாவற்றையும் ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திலிருந்து'' எழுந்த முரண்பாடுகளாக வரையறுக்கிறது. இப்படியாக தற்போதையப் போரின் குண இயல்புகளான கொள்ளையடித்தல், ஏகாதிபத்தியம், பிற்போக்குத் தன்மை, அடிமைத்தனம் ஆகியவற்றை அந்த அறிக்கை தெளிவாக இனம் காணுகிறது. அதாவது, தாய்நாட்டைக் காப்பது என்ற கருத்தைத் தத்துவார்த்த முறையில் அபத்தமானது, நடைமுறையில் முட்டாள்தனமானது எனக் கூறும் குண இயல்பை இனம் காணுகிறது. பெரும் சுறுமீன்கள் மற்ற மக்களினினங்களின் ''தாய்நாடுகளை'' விழுங்குவதற்காக ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. வாதத்திற்கு இடமில்லாத வரலாற்று உண்மைகளிலிருந்து தவிர்க்க முடியாத முடிவுகளுக்கு அந்த அறிக்கை வருகிறது: ''மக்களின் நலன்களுக்காக அது இருப்

---

தனிநபர்களைக் குறிக்கவில்லை. ஆனால் சந்தர்ப்பவாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் இடையில் ஊசலாடுகிற சர்வதேச வகை போலி மார்க்சியவாதிகளை இது குறிக்கிறது. ஆனால் இது எதார்த்தத்தில் சந்தர்ப்பவாதத்தினை மூடி மறைக்கும் ஒரு சமாளிப்பு முறை.

பதாகச் சிறிதளவு சாக்கு கொண்டால் இந்தப் போரை நியாயப்படுத்த முடியாது''; ''முதலாளிகளின் இலாபங்களுக்காகவும் அரசவம்சங்களின் பேராசைகளுக்காகவும்'' அது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ''தொழிலாளர்கள் ஒருவரை ஒருவர் சுட்டுத் தள்ளுவது'' ஒரு ''குற்றமாகும்''. அந்த அறிக்கை கூறுவது அதுதான்.

பழுத்த, பழுத்து அழுகிப்போன முதலாளித்துவத்தின் ஒரு சகாப்தமே, முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய சகாப்தமாகும். அது தகரும் நிலையில் உள்ளது. சோஷலிசத்திற்கு வழி விடுவதற்குப் போதுமான பக்குவ நிலையில் அது உள்ளது. 1789க்கும் 1871க்கும் இடையிலான கட்டம் முற்போக்கு முதலாளித்துவச் சகாப்தமாக விளங்கிற்று. அப்பொழுது வரலாற்று நிகழ்ச்சி நிரலில் நிலப்பிரபுத்துவம், வரம்பிலா அதிகாரம் ஆகியவற்றைத் தூக்கி எறிவதும், அந்நிய நாட்டு நுகத்தடியிலிருந்து விடுதலை பெறுவதும் இடம் பெற்றன. ''தாய்நாட்டைப் பாதுகாத்தல்'', அதாவது ஒடுக்குமுறையை எதிர்த்துப் பாதுகாத்தல் என்பது இத்தகைய அடிப்படையில், இத்தகைய அடிப்படையில் மட்டுமே அனுமதிக்கக் கூடியதாக இருந்தது. இப்பொழுதுகூட இந்த வாசகம் ஏகாதிபத்தியப் பேரரசுகளை எதிர்த்த போருக்குப் பொருந்தும். ஆனால் பால்கன் நாடுகள், ஆசியா மைனர் ஆகியவற்றைக் கொள்ளையிடுவதில் யார் அதிகமான பங்கைப் பெறுவது என்பதை நிர்ணயிக்கும் ஒரு போரான ஏகாதிபத்தியப் பேரரசுகளுக்கிடையிலான போருக்கு இதைப் பயன்படுத்துவது முட்டாள்தனமானது. எனவே தற்போதைய போரில் ''தாய்நாட்டைக் காப்பது'' என்பதை ஆதரித்து வாதாடும் ''சோஷலிஸ்டுகள்'' பாஸெல் அறிக்கையை, ஒரு திருடன் அவன் குற்றம் செய்த இடத்தைத் தவிர்ப்பது போல் தவிர்க்கின்றனர். ஏனெனில் அந்த அறிக்கை, அவர்கள் சோஷலிச-தேசிய வெறியாளர்களாக, அதாவது சொற்களில் சோஷலிஸ்டுகளாகவும் செயல்களில் தேசியவெறியர்களாகவும் இருப்பதாக நிரூபிக்கிறது. அவர்கள், மற்ற நாடுகளை கொள்ளையிடவும் மற்ற தேசங்களை அடிமைப்படுத்தவும் ''அவர்களுடைய சொந்த'' முதலாளித்துவ வர்க்கத்திற்கு உதவிக் கொண்டிருக்கின்றனர். அதனுடைய செயல்கள் மற்ற மக்களினங்களின் தாய்நாடுகளை அடிமைப்படுத்துவதை நோக்க

மாகக் கொண்டிருந்தாலும்கூட ''சொந்த'' தாய்நாட்டைக் காப்பது என்பதுதான் தேசியவெறியின் சாரமாகும்.

தேசிய விடுதலைக்காக ஒரு போர் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று ஏற்றுக் கொள்வது ஒரு வகை போர்த்தந்திரங்களைக் குறிக்கிறது; அதை ஏகாதிபத்தியப் போர் என்று புரிந்துகொள்வது மற்றொன்றை குறிக்கிறது. இந்த அறிக்கை மிகத் தெளிவாகப் பிந்தியதைச் சுட்டிக் காட்டுகிறது. போர் ''ஒரு பொருளாதார, அரசியல் நெருக்கடியைக் கொணரும்'' என்று அது கூறுகிறது. நெருக்கடியைத் தணிக்க, தாய் நாட்டைக் காக்க இதைப் ''பயன்படுத்தக்'' கூடாது, ஆனால் அதற்கு மாறாக, மக்களை ''எழுச்சியுறச்'' செய்ய, ''மூலதன ஆதிக்கத்தின் வீழ்ச்சியை'' விரைவுபடுத்த அப்போரைப் பயன்படுத்த வேண்டும். வரலாற்று நிலைமைகள் இன்னமும் பக்குவமடையாத ஏதேனும் ஒன்றை விரைவுபடுத்துவது முடியாததாகும். சமூகப் புரட்சி சாத்தியமே என்றும் அதற்கான நிலைமைகள் பக்குவமடைந்துள்ளன என்றும் போரின் தொடர்பில் புரட்சி வெடிக்கும் என்றும் அறிக்கை அறிவிக்கிறது. பாரிஸ் கம்யூன், 1905ல் ருஷ்யாவில் ஏற்பட்ட புரட்சி[3] என்ற உதாரணங்களைச் சுட்டிக்காட்டி, அதாவது வெகுஜன வேலைநிறுத்தங்கள், உள்நாட்டுப் போர் என்ற உதாரணங்களைச் சுட்டிக்காட்டி, ''ஆளும் வர்க்கங்கள்'' ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் கண்டு அஞ்சுகின்றன என அந்த அறிக்கை அறிவிக்கிறது. காவுத்ஸ்கி கூறுவதைப் போல், தற்போதைய போருக்கு சோஷலிஸ்டு நோக்கு வரையறுக்கப் படவில்லை என்று கூறுவது தெட்டத்தெளிவான பொய்மையாகும். இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது மட்டுமின்றி, பாஸெலில் தீர்மானிக்கப்பட்டது. அங்கே புரட்சிகர-பாட்டாளி வர்க்க, திரளான மக்கள் பங்கேற்கக் கூடிய போராட்டத்தின் போர்த்தந்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பாஸெல் அறிக்கை முழுவதையும் அல்லது அதனுடைய மிக முக்கியப் பகுதிகளை அலட்சியம் செய்வது, அதற்குப் பதிலாகத் தலைவர்களின் பேச்சுக்களை மேற்கோள் காட்டுவது அல்லது பல்வேறு கட்சிகளின் தீர்மானங்களை மேற்கோள் காட்டுவது என்பது அப்பட்டமான பாசாங்காகும். இப்படிச் செய்வது முதலாவதாக, பாஸெல் காங்கிரசின் முன்னோட்களுக்கு உரிதாகுகிறது; இரண்டாவதாக, உலகம் முழுவதும் உள்ள

கட்சிகளால் அவை ஏற்றுக் கொள்ளப்படாத முடிவுகள்; மூன்ருவதாக, இது சாத்தியமான பல போர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது, ஆனுல் தற்போதைய போருக்கு ஒருபொழுதும் பயன்படுத்தப்படவில்லே. விஷயம் என்னவெனில் பெரும் ஐரோப்பிய பேரரசுகளுக்கிடையிலான தேசிய போர்களின் சகாப்தம் அவற்றிற்கிடையிலான ஏகாதிபத்தியப் போர்களின் சகாப்தத்தால் அகற்றப்பட்டது. முதல் தடவையாக, பாஸெல் அறிக்கை இந்த உண்மையை அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

பாஸெல் அறிக்கையை ஒரு வெற்று மிரட்டல் என்ருே, அர்த்தமற்ற வார்த்தைகளின் திரட்டு என்ருே, பொறுப்பற்ற பிரகடனம் என்ருே கருதுவது ஒரு தவருகும். அந்த அறிக்கை யாரை அம்பலப்படுத்துகிறதோ, அவர்கள் அந்த அறிக்கையை அவ்விதமாகக் கருத விரும்பலாம். ஆனுல் அது உண்மையில்லே. ஆனுல் இரண்டாவது அகில சகாப்தம் முழுவதிலும் தொடர்ந்து நடத்தப்பட்ட மகத்தான பிரச்சாரத்தின் பலனே அந்த அறிக்கை. சோஷலிஸ்டுகள் வெகுஜனங்களிடையே எல்லா மொழிகளிலும் பரப்பிய இலட்சக் கணக்கான பேச்சுக்கள், கட்டுரைகள், அறிக்கைகள் எல்லாவற்றின் சுருக்கமே அது. எடுத்துக்காட்டாக 1899ல் ஜூல் கெட்டு, போர் நிகழும் போது சோஷலிஸ்டுகளின் அமைச்சரவைவாதத்தைக்[4] கண்டித்து எழுதியதை அது வெறுமனே திரும்பிக் கூறுகிறது. ''முதலாளித்துவக் கடற்கொள்ளேக்காரர்களால்'' தூண்டப்பட்ட போரைப் பற்றி எழுதினுர் (*En Gardel*,பக்கம் 175). அது 1909ல் காவுத்ஸ்கி அவருடைய ஆட்சிக்கு வழியில் என்ன எழுதினுரோ அதை வெறுமனே திருப்பிக்கூறுகிறது.காவுத்ஸ்கி அதில் ''சமாதான'' சகாப்தம் முடிந்துவிட்டது, போர்களின், புரட்சிகளின் சகாப்தம் ஆரம்பித்துவிட்டது என்று ஒப்புக்கொண்டார். பாஸெல் அறிக்கையை வெறும் சொற்ருெடர் அல்லது ஒரு தவறு என்று காட்டுவது, கடந்த இருபத்தைந்தாண்டுகளில் சோஷலிஸ்டுகள் செய்த ஒவ்வொன்றையும் வெறும் சொற்ருெடர் அல்லது ஒரு தவறு என்று கருத வேண்டியிருக்கிறது. சந்தர்ப்பவாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும், அறிக்கைக்கும் அதனைப் பயன்படுத்தாமைக்கும் இடையிலான முரண்பாட்டை மிகவும் சகிக்க முடியாததாகக் காணுகின்றனர். ஏனெனில் அது

இரண்டாவது அகிலத்தின் செயலில் உள்ள ஆழ்ந்த முரண் பாடுகளை வெட்ட வெளிச்சமாக்குகிறது. 1871ம் ஆண்டிற் கும் 1914ம் ஆண்டிற்கும் இடையிலான காலத்தின் ஓரளவு ''சமாதான'' இயல்பு, சந்தர்ப்பவாதத்துக்கு முதலில் ஒரு மனநிலையாகவும் பிறகு ஒரு போக்காகவும் இறுதியில் தொழி லாளர்கள் இடையே உள்ள அதிகார வர்க்கத்தினர், குட்டி முதலாளித்துவ அனுதாபிகள் ஆகியோரைக் கொண்ட குழுவை அல்லது சமூக படிநிலையை அது உருவாக்கும் வரை ஊட்டி வளர்த்தது. இத்தகைய நபர்கள் புரட்சிகரக் குறிக்கோள் களையும் புரட்சிகரப் போர்த்தந்திரங்களையும் பேச்சளவில் அங்கீகரிப்பதன் மூலம் மட்டுமே தொழிலாளர் இயக்கத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதில் வெற்றி பெற முடிந்தது. எல்லாவித ''சமாதான'' செயல் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தயாரிக்கச் சேவை செய்வது என்ற அவர்க ளுடைய வற்புறுத்தலால் மட்டுமே அவர்கள் மக்கள் திரளின் நம்பிக்கையைப் பெற முடிந்தது. இந்த முரண்பாடு உடை யும் தறுவாயிலிருந்த ஒரு கொப்புளம். அது உடைந்தது. இங்கே ஒரு கேள்வி எழுகிறது. காவுத்ஸ்கியும் அவரைச் சார்ந்தவர்களும் செய்து கொண்டிருப்பதைப் போன்று, ''ஒற்றுமை'' (சீழுடன்) என்பதற்காக உடலுக்குள் மீண்டும் சீழை அனுப்பச் செய்யும் முயற்சி சரிதானா? அல்லது தொழி லாளர் இயக்கம் என்ற உடல் முழுமையாகச் சுகமடைய உதவுவதற்காக முடிந்த அளவு விரைவாகவும் முழுமையாக வும், சீழை நீக்கும் பொழுது ஏற்படும் கடும் வேதனையான வலியையும் பொருட்படுத்தாமல் சீழை நீக்குவது சரிதானா?

போர் கடன்களை ஆதரித்து வாக்களித்தவர்கள், அமைச் சரகத்தில் சேர்ந்தவர்கள், 1914-15ல் தாய்நாட்டைப் பாது காக்க வாதாடியவர்கள் வெளிப்படையாக சோஷலிசத்திற்கு நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறார்கள். பாசாங்குக்காரர் கள் மட்டுமே இதை மறுப்பார்கள். இந்த உண்மையை விளக்க வேண்டும்.

## 2

இந்த முழுப் பிரச்சினையையும் குறிப்பிட்ட நபர்கள் பற் றிய பிரச்சினையாகக் கருதுவது முட்டாள்தனமானதாக இருக் கும். பிளெஹானவ், கெட்டு போன்ற நபர்கள் இருக்கையில்

*சந்தர்ப்பவாதம் என்ன செய்ய இருக்கிறது?* என்று காவுத்ஸ்கி *கேட்கிறார் (Neue Zeit*[5]*, 1915 மே 28). நால்வர் ஒப்பந்த சந்தர்ப்பவாதிகளின் சார்பாக (Die Krise der Sozialdemokratie,** *ஜூரிக், 1915, பக்கம் 21)* அக்செல்ரோத் *கேட்கிறார்:* காவுத்ஸ்கி *இத்தியாதி நபர்கள் இருக்கையில் சந்தர்ப்பவாதம் என்ன செய்ய இருக்கிறது?* இது *ஒரு முழுக்* கேலிக்கூத்து. அனைத்து இயக்கத்தின் நெருக்கடி விளக்கப்பட வேண்டுமானால், முதலாவதாக, தற்போதையக் கொள்கையின் பொருளாதார முக்கியத்துவம், இரண்டாவதாக அதனுடைய அடிப்படைக் கருத்துக்கள், மூன்றாவதாக, சோஷலிச இயக்கத்திலுள்ள பல்வேறு வரலாற்றுப் போக்குகளுடன் அதனுடைய தொடர்பு ஆகியவற்றைப் பற்றிய ஆய்வு ஒன்று செய்யப்பட வேண்டும்.

*1914-1915ம் ஆண்டுப் போரில் தற்காப்புவாதத்தின் பொருளாதாரச் சாரம் என்ன?* எல்லா *பெரும் அரசுகளின் முதலாளித்துவ வர்க்கத்தினர்களும் உலகத்தைப் பிரித்துச் சுரண்டவும் மற்ற மக்களினங்களை ஒடுக்கவும் போரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கத்தினரின் பெரும் இலாபங்களில் ஒரு சிறு பங்கு, தொழிலாளர்களிடையே உள்ள அதிகாரவர்க்கத்தினர், உயர்குடியோர், முதலாளித்துவ ஆதரவாளர்கள் ஆகிய சிலருக்கு வரலாம். சமூக-தேசியவெறியும் சந்தர்ப்பவாதமும் ஒரே வர்க்க அடிப்படையைக் கொண்டுள்ளன. அதாவது சலுகை பெற்ற ஒரு சிறு பகுதித் தொழிலாளர்கள் ''அவர்களுடைய'' தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினருடன் திரளான தொழிலாளர் வர்க்கத்தினருக்கு* எதிரான *கூட்டணி, முதலாளித்துவ வர்க்கம் சுரண்டிக் கொண்டிருக்கும் வர்க்கத்திற்கு* எதிரான *முதலாளித்துவ வர்க்கத்திற்கும் அதன் குற்றேவலர்களுக்கும் இடையிலான கூட்டணி ஆகியவையாகும்.*

சந்தர்ப்பவாதமும் *சமூக*-தேசியவெறியும் ஒரே அரசியல் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. *அதாவது வர்க்கங்களின் ஒத்துழைப்பு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறுத்தல், புரட்சிகர நடவடிக்கைகளை மறுத்தல், முதலாளித்துவ சட்ட முறையை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ளுதல், பாட்*

*—*''சமூக-ஜனநாயகவாதத்திலான நெருக்கடி.''*—பு-ர்,

டாளி வர்க்கத்திடம் நம்பிக்கையின்மை, முதலாளித்துவ வர்க்கத்திடம் நம்பிக்கை போன்றவை. சமூக-தேசிய வெறி என்பது ஆங்கிலேயத் தொழிலாளர் துறையிலான மித வாதக் கொள்கை, மில்லிரானியம், பெர்ன்ஷ்டைனியம்[6] ஆகியவற் றின் நேரடியான தொடர்ச்சியும் நிறைவேற்றமுமாகும்.

1889ம் ஆண்டு முதல் 1914ம் ஆண்டு வரை உள்ள காலம் முழுவதையும் தொழிலாளர் இயக்கத்தின் இரு முக்கிய போக்குகளுக்கு — புரட்சிகர சோஷலிசம், சந்தர்ப்பவாத சோஷலிசம்—இடையிலான போராட்டம் நிரப்புகிறது. இன் றும் கூட ஒவ்வொரு நாட்டிலும் போரைப் பற்றிய நோக்கத் தில் இரு முக்கியப் போக்குகள் உள்ளன. குறிப்பிட்ட நபர் களை எடுத்துக்காட்டும் முதலாளித்துவ, சந்தர்ப்பவாதப் பழக்கத்தை நாம் விட்டுவிடுவோம். பல நாடுகளில் உள்ள போக்குகளை நாம் எடுத்துக் கொள்ளுவோம். நாம் பத்து ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொள்ளுவோம். அவையா வன: ஜெர்மனி, பிரிட்டன், ருஷ்யா, இத்தாலி, ஹாலந்து, ஸ்வீடன், பல்கேரியா, ஸ்விட்சர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ். முதல் எட்டு நாடுகளில் சந்தர்ப்பவாதப் போக்கு, புரட்சிக்கரப் போக்கு என்ற பிரிவினை, சமூக-தேசியவெறி யர்கள் சர்வதேசியவாதிகள் என்ற பிரிவினையுடன் ஒத்த நிலை யில் உள்ளது. ஜெர்மனியில் சமூக-தேசியவெறியாளர்களின் அரண் *Sozialistische Monatshefte*,[7] லேகினும் அவரைச் சார்ந்தவர்களும் ஆகும். பிரிட்டனில் ஃபேபியன்களும்[8] தொழிற்கட்சியும்[9] (I. L. P.[10] எப்பொழுதும் அவர்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது; அவர்களுடைய மத்திய செய்தித் தாளை ஆதரிக்கிறது; இந்தக் கூட்டணியில் அது, சமூக-தேசிய வெறியர்களை விட எப்பொழுதும் பலஹீனமானது; அப்படி யிருக்க B. S. P.யில்[11] ஏழில் மூன்று பங்கு சர்வதேசியவாதிகள்); ருஷ்யாவில் இந்தப் போக்கு நாஷா சார்யா (இப்பொழுது நாஷே தேலோ[12] என்ற பத்திரிக்கையாலும் ஒழுங்கமைப்புக் கமிட்டியாலும்[13] செஹெயீத்ஸேவால் தலைமை தாங்கிய டூமாவின் பிரிவினாலும்[14] பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது; இத்தாலியில் பிஸ்ஸொலாட்டி தலைமையிலுள்ள சீர்திருத்த வாதிகளால் அது பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது; ஹாலந் தில் டுரூல்ஸ்திராவின் கட்சியாலும்; ஸ்வீடனில் பிராண்டிங் தலைமையிலுள்ள கட்சியின் பெரும்பான்மையாலும்; பல்கே

ரியாவில் ''ஷிரோக்கிகள்''[15] எனும் கட்சியினுலும்; ஸ்விட்சர் லாந்தில் கிரேய்லிஹ் மற்றும் அவருடைய ஆதரவாளர்களா லும் அது பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. இந்த நாடு கள் எல்லாவற்றிலும் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள், சமூக-தேசியவெறியர்களை எதிர்த்து கிட்டத்தட்ட கடுமை யான எதிர்ப்புக் குரல் எழுப்பினர். பிரான்சும் பெல்ஜியமும் விதிவிலக்கான இரு நாடுகள். அங்கு சர்வதேசியவாதம்கூட இருக்கிறது, ஆனுல் அது மிக பலவீனமாக இருக்கிறது.

சமூக-தேசியவெறி என்பது முடிவுற்ற வடிவத்திலுள்ள சந்தர்ப்பவாதமாகும். முதலாளித்துவ வர்க்கங்களுடனும் தலைமை ராணுவ இலாக்காவுடனும் வெளிப்படையானதும் அடிக்கடி கொச்சையானதும் ஆன ஒரு கூட்டணிக்கு அது முழுமையாகப் பக்குவமடைந்துள்ளது. இந்தக் கூட்டணி தான் அதற்கு மகத்தான வலிமையையும் சட்ட பூர்வ அச்சி டும் வசதிகளில் ஏகபோக நிலையையும் மக்கள் திரளை ஏமாற்று வதற்கு ஓர் ஏகபோக நிலையையும் கொடுக்கிறது. சந்தர்ப்ப வாதத்தை உள்கட்சி விவகாரம் என்று கருதிக் கொண்டே இருப்பது முட்டாள்தனமானது. பாஸெல் தீர்மானத்தை, டேவிட், லேகின், ஹைண்ட்மன், பிளெஹானவ், வெப் ஆகியோருடன் நிறைவேற்றுவது என்று எண்ணிப் பார்ப் பதே ஒரு நகைப்புக்குரியதாகும். சமூக-தேசியவெறியாளர் களுடன் ஒற்றுமை என்பது மற்ற நாடுகளைச் சுரண்டுகிற, ''சொந்த'' தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒற்று மையாக இருப்பது என்று பொருளாகும்; சர்வதேசப் பாட் டாளி வர்க்கத்தை உடைக்கிறது என்பது அதன் அர்த்த மாகும். சந்தர்ப்பவாதிகளிடமிருந்து உடனடியாக விலகுவது சாத்தியம் என்று இதற்கு அர்த்தமல்ல. வரலாற்று ரீதியாக இந்தப் பிளவு ஏற்படக்கூடிய பக்குவத்தையடைந்துள்ளது என்று பொருள். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டத்திற்கு அது அவசியமானதும் தவிர்க்க முடியாத துமாகும் என்று பொருள். நம்மை ''சமாதான'' முதலாளித் துவத்திலிருந்து ஏகாதிபத்திய முதலாளித்துவத்திற்கு அழைத்துச் சென்ற வரலாறு இந்தப் பிளவிற்கு வழி வகுத் திருக்கிறது. Volentem ducunt fata, nolentem trahunt.*

---

* —விருப்பம் உள்ளவர்களை விதி வழி நடத்துகிறது, விருப்பம் இல்லாதவர்களை இழுத்துச் செல்லுகிறது.—ப-ர்.

## 3

முதலாளித்துவ வர்க்கத்தினரின் புத்திக் கூர்மையுள்ள பிரதிநிதிகளால் இது மிகச் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுல்தான், ''தாய்நாட்டைப் பாதுகாப்பவர்களால்'' தலைமை தாங்கப்பட்ட, அதாவது ஏகாதிபத்தியக் கொள்ளை முறையினைப் பாதுகாப்பவர்களால் தலைமை தாங்கப்பட்ட தற்போதைய சோஷலிசக் கட்சிகளைப் புகழும் நபர்கள் தமது புகழ்ச்சியுரையில் தாராளமாக இருக்கிருர்கள். அதனுல்தான் சமூக-தேசியவெறித்தனத் தலைவர்களுக்கு, அவர்களுடைய அரசாங்கங்களால் அமைச்சர் பதவிகளோ (பிரான்சிலும் பிரிட்டனிலும்) அல்லது சட்ட பூர்வமாக இருப்பதற்கு (ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும்) தடையற்ற ஏகபோகமோ கொடுக்கப்படுகின்றன. அதனுல்தான் சமூக-ஜனநாயகக் கட்சி மிக பலம் வாய்ந்ததாக இருந்த ஜெர்மனியில், அது ஒரு தேசிய-மிதவாத எதிர்புரட்சித் தொழிலாளர் கட்சியாக உருமாறுவது மிக வெளிப்படையாகியுள்ள ஜெர்மனியில், ''சிறுபான்மையினருக்கும்'' ''பெரும்பான்மையினருக்கும்'' இடையிலான போராட்டத்தை, ''வர்க்க வெறுப்பைத் தூண்டிவிடும்'' போராட்டமாக அரசாங்க வழக்கறிஞர் கருதுகின்றனர் எனும் நிலையை விவகாரங்கள் அடைந்துள்ளன. அதனுல்தான் புத்திசாலியான சந்தர்ப்பவாதிகளின் மிகப் பெரிய அக்கறை, பழைய கட்சிகளின் முன்னுளைய ''ஒற்றுமையை'' நீடித்துக் காப்பது ஆகும். 1914-15ல் அவை முதலாளித்துவ வர்க்கத்துக்குப் பெரும் உதவி செய்துள்ளன. உலக நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள இந்தச் சந்தர்ப்பவாதிகளின் கருத்தோட்டங்கள், ''மானிட்டர்'' எனக் கையெழுத்திட்டு ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதி ஒருவரால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் போற்றுதற்குரிய கள்ளம்கபடமற்ற முறையில் விளக்கிக் கூறப்பட்டன. இக்கட்டுரை 1915ம் ஆண்டு ஏப்ரல் மாதம் *Preussische Jahrbücher*[16] என்ற பிற்போக்கு சஞ்சிகை ஒன்றில் வெளிவந்தது. சமூக-ஜனநாயகவாதிகள் இன்னும் அதிகமாக வலது பக்கம் வர நேர்ந்தால் அது முதலாளித்துவ வர்க்கத்துக்கு அபாயகரமானது என்று ''மானிட்டர்'' நினைக்கிருர். ''அது சோஷலிசக் கருத்துகளுடன் கூடிய ஒரு தொழி

லாளர் கட்சி எனும் இயல்பை நீடித்துக் கொள்ள வேண்டும்; ஏனெனில் அது இதைக் கைவிட்ட நாளன்று ஒரு புதிய கட்சி தோன்றும். இக்கட்சி பழைய கட்சி கைவிட்ட வேலைத் திட்டத்தை ஏற்கும், இதற்கு இன்னும் அதிகமான தீவிர வாசகத்தைக் கொடுக்கும். (*Preussische Jahrbücher*, 1915, இதழ் 4, பக்கங்கள் 50-51).

''மானிட்டர்'' சரியாகவே யூகம் செய்துள்ளார். அதைத் தான் பிரிட்டிஷ் மிதவாதக் கட்சியினரும் பிரான்சின் தீவிரவாதிகளும் எப்பொழுதும் விரும்பினார்கள்—மக்களை ஏமாற்றி, கொள்ளையடிக்கும் போர் ஒன்றில் ''தாய் நாட்டைப் பாதுகாப்பது'' என்ற பிரச்சாரம் செய்யும் தகுதியுள்ள மனிதர்களான லாயிட் ஜார்ஜ், செம்பா, ரெனெடேல், லேகின், காவுத்ஸ்கி வகையினரிடம் அவர்களுடைய நம்பிக்கையை வைக்கும்படி மக்களைத் தூண்டும் ஒரு புரட்சிகரச் சொற்றொடர்கள்தான் அவர்களுக்கு வேண்டும்.

ஆனால் ''மானிட்டர்'', வெளிப்படையானதும் கரடுமுரடானதும் சிடுசிடுப்பானதுமான சந்தர்ப்பவாத வகை ஒன்றை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறார். மற்றவர்கள் இரகசியமாக, நழுவுத்திறமாக, ''நேர்மையாகச்'' செயல்புரிகின்றனர். ''நேர்மையான'' சந்தர்ப்பவாதிகள்தான் தொழிலாளர் வர்க்கத்திற்கு மிகவும் அபாயகரமானவர்கள் என்று எங்கெல்ஸ் ஒரு முறை கூறினார்.[17] இதோ ஓர் எடுத்துக் காட்டு:

*Neue Zeit* (1915 நவம்பர் 26) என்ற சஞ்சிகையில் காவுத்ஸ்கி பின்வருமாறு எழுதினார்: ''பெரும்பான்மையினருக்கு எதிரான எதிர்ப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது; மக்கள் திரள் ஓர் எதிர்ப்பு மனநிலையில் உள்ளது.... போருக்குப் பின் [போருக்குப் பின்னால் மட்டும்தானே?—நி.லெ.] வர்க்க பகைமை, மக்களிடையே தீவிரவாதத்தின் கை மேலோங்கும் அளவிற்குக் கூர்மையடையும்.... போருக்குப் பின்னால் [போருக்குப் பின்னால் மட்டும்தானே?—நி.லெ.] கட்சியைத் தீவிரவாத நபர்கள் விட்டோடுதல், நாடாளுமன்ற எதிர்ப்பு [?? நாடாளுமன்றத்திற்குப் புறம்பான] என்ற மக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கட்சிக்குள் அவர்களின் உள் வரவு ஆகியவற்றால் நாம் அச்சுறுத்தப்படலாம்.... இப்படியாக எங்களுடைய கட்சி கடைகோடியான இரு முகாம்

களாகப் பிரிந்து கொண்டிருக்கிறது. அவ்விரு முகாம்களுக்கும் பொதுவானதாக எதுவுமே இல்லை''. ஒற்றுமையைக் காப்பதற்காக, சிறுபான்மையினருக்கு ஒரு சில தீவிரமான நாடாளுமன்றப் பேச்சுக்களைப் பேச அனுமதிக்கச் செய்யும்படி, ரெய்ஹ்ஸ்டாகில் உள்ள பெரும்பான்மையினரை இணங்க வைக்க காவுத்ஸ்கி முயற்சிக்கிறார். சந்தர்ப்பவாதிகளுடன் புரட்சிகரமான மக்களைச் சமரசப்படுத்துவதற்காக ஒரு சில தீவிரவாத நாடாளுமன்றப் பேச்சுக்களைப் பயன்படுத்த காவுத்ஸ்கி விரும்புகிறார் என்பது அதன் பொருளாகும். சந்தர்ப்பவாதிகளுக்கும் புரட்சிக்கும் ''பொதுவானது ஒன்றுமில்லை''. சந்தர்ப்பவாதிகள் தொழிற்சங்கங்களின் தலைமையை நீண்டகாலமாக வைத்திருந்தார்கள். இப்பொழுது அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்துடனும் அரசாங்கத்துடனுமான நெருக்கமான கூட்டணியின் அடிப்படையில் கட்சியின் தலைமையையும் கைப்பற்றி இருக்கிறார்கள். இதற்கும் ''மானிட்டரின்'' ''வேலைத்திட்டத்திற்கும்'' இடையில் என்ன முக்கிய வேறுபாடு உள்ளது? மார்க்சியத்தைத் தீயவழியில் பயன்படுத்தக்கூடிய இனிய சொற்களைத் தவிர வேறொன்றும் அதிலில்லை.

1915 மார்ச் மாதம் 18ம் தேதி ரெய்ஹ்ஸ்டாக் பிரிவுக் கூட்டம் ஒன்றில் காவுத்ஸ்கியைப் பின்பற்றுவோரில் ஒருவரான வுர்ம், பிரச்சினையை மிகத் தீவிரம் அடையச் செய்வதை எதிர்த்து ''எச்சரித்தார்''. திரளான தொழிலாளர்களுக்கு இடையில் அப்பிரிவின் பெரும்பான்மையினருக்கு எதிர்ப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது. நாம் மார்க்சிஸ்ட் மையத்தை ஒட்டியிருக்க வேண்டும் [?! ஒரு அச்சுப் பிழையாக இருக்கலாம்; அது ''மானிட்டர்'' மையம் என்று இருக்க வேண்டும்] (*Klassenkampf gegen dan Krieg! Material zum Fall Liebknecht*, Als Manuskript gedruckt*, p. 67). இப்படியாக மக்கள் பெருந்திரளின் புரட்சிகர மனப்போக்கு எல்லா காவுத்ஸ்கிவாதிகளின் (''மையம்'' என்றழைக்கப்படும்) சார்பாக 1915ம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே ஒரு

---

* போருக்கு எதிரான வர்க்கப் போராட்டம்! ''லீப்க்னெஹ்ட் வழக்கு'' என்பதற்கான தஸ்தாவேஜுகள். விற்பனைக்காக அல்ல தனிப்பட்ட வினியோகத்திற்கு மட்டுமே அச்சிடப்பட்டது.—ப-ர்.

உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது!! ஆனுல் எட்டரை மாதங்களுக்குப் பிறகு, காவுத்ஸ்கி, போராட்டக் குணமுள்ள மக்கள் பெருந்திரளை சந்தர்ப்பவாதிகளுடனும் எதிர்ப்புரட்சி கட்சியுடனும் சமரசமாக்கும் ஒரு திட்டத்துடன் மீண்டும் முன்வருகிருர். புரட்சிகரமாக ஒலிக்கக் கூடிய ஒரு சில சொற்களுடன் இதைச் செய்ய விரும்புகிருர்!!

அழுகிப் போனது எது என்பதை அம்பலப்படுத்தவும் சம்பிரதாயத்தைக் கைவிடவும் போர் அடிக்கடி பயனுள்ளதாக இருக்கிறது.

பிரிட்டிஷ் ஃபேபியன்களை, ஜெர்மானிய காவுத்ஸ்கிவாதிகளுடன் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். ஒரு உண்மையான மார்க்சிஸ்ட் பிரெடெரிக் எங்கெல்ஸ், பிரிட்டிஷ் ஃபேபியன்களைப் பற்றி 1893 ஜனவரி 18ல் எழுதியது பின்வருமாறு: அவர்கள் ''...சமுதாயப் புரட்சி தவிர்க்க முடியாதது என்பதை உணரும் அளவிற்குப் புத்தியுள்ளவர்கள். ஆனுல் அவர்கள் இந்த மிகப் பெரிய வேலையை, அனுபவமற்ற பாட்டாளி வர்க்கத்தினரிடம் மட்டும் ஒப்படைக்க விரும்பாதவர்கள்.... புரட்சியைப் பற்றிய பயம் அவர்களின் அடிப்படைக் கோட்பாடு.'' (ஸோர்கேயிற்கு எழுதிய கடிதங்கள், பக்கம் 390).

1893 நவம்பர் மாதம் 11ல் அவர் எழுதினுர்: ''இத்தகைய முதிராத, கல்வியில்லாத மக்கள் பெருந்திரள் தன்னைத் தானே விடுதலை செய்து கொள்ள முடியாது என்றும் இந்தப் புத்திசாலியான வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், உணர்ச்சி வயப்படக் கூடிய வயது முதிர்ந்த பெண்கள் ஆகியோர்களின் இரக்கமில்லாமல் எதையும் சாதிக்க முடியாது என்றும் உணரக் கூடிய அளவுக்குப் பாட்டாளி வர்க்கத்தினருக்கு அறிவு இருந்தால் அவர்களை மேலேயிருந்து விடுதலை செய்ய அருள் பாலிப்பவர்களான அந்த ஆணவம் பிடித்த முதலாளித்துவ வர்க்கத்தினர்.... (அதே நூல், பக்கம் 401).

தத்துவத் துறையில், ஃபாரிசி குற்றம் செய்த அப்பாவியை ஏளனமாக நோக்கியதைப் போல், காவுத்ஸ்கி ஃபேபியன்களை ஏளனமாக நோக்குகிருர். ஏனெனில் அவர் ''மார்க்சியத்தின்'' பேரால் பேசுகிருர். ஆனுல் இந்த இருவருக்கும் உண்மையில் என்ன வேறுபாடு உள்ளது? இருவரும் பாஸெல் அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். இருவரும் அதை, இரண்டாவது வில்ஹெல்ம் பெல்ஜியத்தின் நடுநிலைமைத் தன்

மையைக் கையாண்டதைப் போல் கையாண்டனர். ஆனால் தொழிலாளர்களின் புரட்சிகரமான உணர்வைத் தணிக்க முயன்றவர்களை மார்க்ஸ் தன் வாழ்நாள் முழுவதும் கண்டித்துரைத்தார்.

புரட்சிகர மார்க்சிஸ்டுகளுக்கு காவுத்ஸ்கி ''அதித-ஏகாதிபத்தியம்'' என்ற அவருடைய புதிய தத்துவத்தை முன் வைத்திருக்கிறார். இதற்குப் பொருள், ''தேசிய நிதி முதலாளிகளுக்கிடையிலான போட்டிகள்'' ''சர்வதேச நிதி மூலதனத்தால் உலகத்தைக் கூட்டாகச் சுரண்டுவது'' என்ற செயலால் அகற்றப்பட இருக்கின்றன என்று அவர் கருதுகிறார் என்பதாகும். (*Neue Ziet*, 1915 ஏப்ரல் 30.) ஆனால் அவர் மேலும் கூறுகிறார்: ''முதலாளித்துவத்தின் இந்தப் புதிய காலகட்டம் சாத்தியமா என்பதைத் தீர்மானிக்க நம்மிடம் இன்னமும் போதுமான முன்தேவைகள் இல்லை.'' ''புதிய காலகட்டம்'' நிச்சயமாக ''சாத்தியம்'' என்று துணிந்து அவரால் அறிவிக்கக் கூட முடியவில்லை. அதே நேரத்தில் ஒரு ''புதிய காலகட்டம்'' என்ற வெறும் பாவனையின் அடிப்படையில் இந்தக் காலகட்டத்தின் கண்டுபிடிப்பாளர் அவருடைய சொந்த புரட்சிகரமான அறிவிப்புக்களையும், அத்துடன் பாட்டாளிகளின் புரட்சிகரப் பணிகளையும், புரட்சிகரப் போர்த்தந்திரங்களையும் நிராகரிக்கிறார். அதாவது ஏற்கெனவே தோன்றிவிட்ட ஒரு நெருக்கடியின் ''காலகட்டத்தில்,'' போர் காலகட்டத்தில், மற்றும் இதுவரை நிகழ்ந்திராத வர்க்கப் பகைமையின் அதிகரிப்பு என்ற காலகட்டத்தில் அவற்றை இப்பொழுது நிராகரிக்கிறார். ஃபேபியனிசம் அதனுடைய மிக வெறுக்கத்தக்க நிலையில் இல்லையா?

ருஷ்யக் காவுத்ஸ்கிவாதிகளின் தலைவரான அக்செல்ரோத் கூறுகிறார்: ''விடுதலைக்கான பாட்டாளி வர்க்க இயக்கத்தை சர்வதேசமயமாக்கும் பிரச்சினையின் ஈர்ப்பு மையம் அன்றாட நடவடிக்கைகளை சர்வதேசமயமாக்குவதாகும்''. எடுத்துக்காட்டாக, ''தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் காப்பீடு பற்றிய சட்டமுறை, தொழிலாளர்களின் சர்வதேச ஒழுங்கமைப்பிற்கும் நடவடிக்கைகளுக்கும் ஆன குறிக்கோளாக இருத்தல் வேண்டும்''. (அக்செல்ரோத், சமூக-ஜனநாயகத்தின் நெருக்கடி, ஜூரிக், 1915, பக்கங்கள் 39-40). லேகின், டேவிட், வெபுகள் மட்டுமல்ல ஆனால் லாயிட் ஜார்ஜ்,

நாவுமன், பிரியாண்டு, மில்யுக்கோவ் ஆகியோரும் கூட இத் தகைய ''சர்வதேசியவாதத்திற்கு'' மிகத் தெளிவாகத் தங் களுடைய ஒப்புதலைத் தெரிவிக்கின்றனர். 1912ல் இருந் ததைப் போல், எதிர்கால அகிலம் ''முன்வந்து [போர் மூண் டால் அரசாங்கங்களுக்கு எதிராக] புரட்சிகரப் புயல் ஒன்றை உண்டாக்கினால்'' அக்செல்ரோத் வெகு செய்மையிலுள்ள எதிர்காலத்திற்காக மிகப் புரட்சிகரமான சொற்களைக் கூறத் தயாராக இருக்கிறார். எவ்வளவு தைரியசாலிகள் நாமெல் லாம்! ஆனால் இ ப் பொ ழு து மக்கள் திரளிடையே ஆரம் பித்து வரும் புரட்சிகர எழுச்சியை ஆதரித்து வளர்க்க வேண் டிய நிலை வரும்பொழுது அக்செல்ரோத் பின்வருமாறு கூறு கிறார்: ''ருஷ்யாவில் 1901 நடைபெற்ற மாணவர்கள் ஆர் பாட்டங்களானது ருஷ்யாவின் வரம்பிலா அதிகாரத்தை முடி விற்குக் கொண்டுவரும் போர்களுக்கு கட்டியம் கூறியது போல் சமூகப் புரட்சி தொடங்குவதற்கு சற்று முன்பு நாம் இருந்திருப்போமேயானால்'' புரட்சிகர மக்கள் திரளின் நட வடிக்கைகளின் போர்த்தந்திரங்கள் ஓரளவு நியாயப் படுத்தப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் தற்சமயம் எல் லாம் ''கற்பனாவாதம்'' ''பக்கூனின்வாதம்''[18] இத்தியாதி ஆக உள்ளன. இது முழுமையாக கோல்ப், டேவிட், சுடெக் கும், லேகின் ஆகியோரின் மன உணர்வில் இருக்கிறது.

அருமை முதியவர் அக்செல்ரோத் மறப்பது என்னவெ னில் 1901ல் ருஷ்யாவில் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னால்— தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள் நான்கு ஆண்டு களுக்குப் பின்னால்—முதல் தீர்மானிக்கும் ''இறுதிப் போர்'' நடைபெறலாம் என்பதும் அது ''முடிவிற்கு வராததாக'' இருக்கலாம் என்பதும் ஒருவருக்கும் தெரியாது அல்லது தெரிந்திருக்க முடியாது என்பதாகும். இருந்த போதிலும் புரட்சிகர மார்க்சிஸ்டுகளாகிய நாங்கள் மட்டும் அந்த நேரத் தில் சரியாகக் கூறினோம். நாங்கள் கிரிச்சேவ்ஸ்கிகளையும் மார்த்தினவ்களையும் ஏளனம் செய்தோம்—அவர்கள் ஓர் உடனடியான தாக்குதலுக்கு அழைப்பு விடுத்தனர் என்பதற் காக. ஒவ்வொரு இடத்திலும் சந்தர்ப்பவாதிகளை வெளி யேற்றும்படியும் ஆர்ப்பாட்டங்களையும் மற்ற மக்கள்திரளின் புரட்சிகர நடவடிக்கைகளையும் ஆதரிக்க, கூர்மையடையச் செய்ய, விரிவுபடுத்த ஒவ்வொரு முயற்சியையும் செயலாக்

கும்படியும் மட்டுமே நாங்கள் வெறுமனே தொழிலாளர்களை அறிவுறுத்தினோம். ஐரோப்பாவில் தற்போதைய நிலைமை முழுக்க முழுக்க அதைப் போலவே உள்ளது. ''உடனடியான'' தாக்குதலுக்கு அழைப்பு விடுதல் முட்டாள்தனமானது. ஆனால் ஒருவர் தன்னை ஒரு சமூக-ஜனநாயகவாதி என்று கூறிக் கொண்டு தொழிலாளர்களை சந்தர்ப்பவாதிகளிடமிருந்து உடைந்துவர ஆலோசனை கூறாமல், அவர்களுடைய ஆரம்பநிலையில் உள்ள புரட்சிகர இயக்கம், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றை வலுவாக்க, ஆழப்படுத்த, விரிவுபடுத்த, கூர்மையாக்கத் தொழிலாளர்களின் எல்லா முயற்சிகளையும் செயல்படுத்தாமல் இருப்பது ஒரு வெட்கக்கேடாகும். புரட்சி என்பது ஆகாயத்தில் இருந்து ஆயத்த நிலையில் ஒருபொழுதும் விழாது. புரட்சிகர எழுச்சி ஆரம்பித்து விட்டால் அது ஓர் ''எதார்த்தமான'', ''மெய்யான'' புரட்சிக்கு இட்டுச் செல்லுமா, எப்பொழுது இட்டுச் செல்லும் என்று யாராலும் கூற முடியாது. காவுத்ஸ்கியும் அக்செல்ரோதும் தொழிலாளர்களுக்குப் பழைய, தூசுபடிந்த, எதிர்ப்புரட்சி ஆலோசனையை கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். காவுத்ஸ்கியும் அக்செல்ரோதும் எதிர்கால அகிலம் நிச்சயமாகப் புரட்சிகரமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் திரளுக்கு ஊட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் எதிர்ப் புரட்சி நபர்களான லேகின்கள், டேவிட்கள், வண்டர்வேல்டேகள், ஹைஹண்ட்மன்கள் ஆகியோரின் தற்போதைய ஆதிக்கத்தைப் பாதுகாக்க, மாறுவேடம் அணிய, கவர்ச்சியுள்ளதாக ஆக்க என்ற ஒரே நோக்கத்திற்காக அவர்கள் இதை செய்து கொண்டிருக்கிறார்கள். லேகினுடனும் அவரைச் சார்ந்தவர்களுடனும் ''ஒற்றுமை'' என்பது ''எதிர்காலப்'' புரட்சிகர அகிலத்தைத் தயாரிப்பதற்கான சிறந்த வழி என்பது வெளிப்படையாக இல்லையா?

*1914* நவம்பர் 1ம் தேதிய எங்களுடைய கட்சியின் மத்திய கமிட்டியின் அறிக்கைக்கு அளித்த பதிலில் (*Die Sozialdemokratie und der Weltkrieg*, — ''சமூக-ஜனநாயகவாதமும் உலகப் போரும்,'' 1915, பக்கம் 172), ஜெர்மன் நாட்டு சந்தர்ப்பவாதிகளின் தலைவரான டேவிட் ''உலகப் போரை உள்நாட்டுப் போராக மாற்ற முயற்சிப்பது பைத்தியக்காரத்

தனமாகும்'' என்று அறிவிக்கிறர். மற்றவற்றிற்கு இடையில் இந்த அறிக்கை கூறுகிறது:

''குறிப்பிட்ட எந்தவொரு தருணத்திலும் இந்த மாற்றம் எதுவரை இடர்ப்பாடானதாகத் தோன்றிய போதிலும், போர் இன்று செயலுண்மையாகிவிட்ட நிலையில் இந்தத் திசை வழியில் சோஷலிஸ்டுகள் முறையான, உறுதியான பிறழாத தயாரிப்புப் பணியினை என்றுமே விட்டுவிடாமல் செய்தல் வேண்டும்.''*

(இப்பகுதி டேவிடாலும் கூட மேற்கோளாகக் காட்டப் பட்டது, பக்கம் 171.) டேவிடின் புத்தகம் வெளிவருவதற்கு ஒரு மாதத்திற்கு முன் எங்களுடைய கட்சி தனது தீர்மானங் களை வெளியிட்டு, ''முறையான தயாரிப்பு'' என்பதைப் பின் வருமாறு வரையறுத்தது: (1) கடன்களுக்கு ஆதரவாக வாக் களிப்பதை மறுத்தல். (2) வர்க்கங்களுக்கு இடையில் சமா தானத்தை முறித்தல். (3) சட்டத்திற்கு மாருன ஸ்தாபனங் களை அமைத்தல். (4) போர்முனையில் ஒற்றுமையை வெளிப் படுத்தலுக்கான ஆதரவு. (5) எல்லாப் புரட்சிகரமான மக்கள் நடவடிக்கைகளையும் ஆதரிப்பது.**

டேவிட் கிட்டத்தட்ட அக்செல்ரோத் அளவிற்குத் தைரியசாலி. 1912ல் போரை எதிர்பார்த்து பாரிஸ் கம் யூனைச் சுட்டுக் குறிப்பதானது ''பைத்தியம்'' என்று அவர் எண்ணியதில்லை.

ஆன்டான்ட் நாடுகளிலுள்ள சமூக-தேசியவெறியாளர் களில் ஒரு முன்மாதிரி பிரதிநிதியான பிளெஹானவ், புரட்சி கரப் போர்த்தந்திரங்களைக் குறித்து டேவிட் கொண்டுள்ள அதே கருத்துக்களையே கொண்டிருக்கிறர். அவர் அவற்றை ''ஒரு கேலிக் கூத்தான கனவு'' என்று அழைக்கிறர். வெளிப் படை சந்தர்ப்பவாதியான கோல்ப் சொல்வதைக் கேளுங்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 4, முன் னேற்றப் பதிப்பகம், பக்கம் 18.—ப-ர்.

** ''ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி யின் வெளிநாட்டுப் பிரிவுகளினுடைய மாநாடு'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 21, p. 161).—ப-ர்.

கள்; ''லீப்க்னெஹ்டினைப் பின்பற்றுவோரின் போர்த்தந்திரங் களின் விளைவானது ஜெர்மன் தேசத்திற்குள் நடக்கும் போராட்டம் உச்சக்கட்டத்திற்கு வளர்க்கப்பட்டிருக்க லாம்.'' (*Die Sozialdemokratie am Scheidewege* — ''பாதை களின் சந்திப்பிலுள்ள சமூக-ஜனநாயகவாதம்'', பக்கம் 50.)

ஆனால் உள்நாட்டுப் போர் இல்லை எனில் ஒரு போராட் டத்தை உச்சக்கட்டத்திற்கு வளர்ப்பது என்பது என்ன?

ஸிம்மர்வால்டு இடதுசாரிகளின்[19] போர்த்தந்திரங்களுடன் மிகப்பரந்த அளவு ஒத்திருக்கும் எங்களுடைய மத்தியக் கமிட்டியின் போர்த்தந்திரங்கள் ''பைத்தியக்காரத்தனமா னது'', ''கனவு'', ''முரட்டுத் துணிச்சல்வாதம்'', ''பக்கூனி னியம்'' என்றால்—டேவிட், பிளெஹானவ், அக்செல்ரோத், காவுத்ஸ்கி மற்றும் பிறர் மதிப்பிட்டது போல்—அவை ஒரு பொழுதும் ''தேசத்திற்குள் ஒரு போராட்டத்திற்கு'', குறிப் பாக உச்ச நிலைக்குக் கொண்டுவரப்பட்ட போராட்டத்திற்கு இட்டுச் செல்ல முடியாது. உலகத்தில் எங்கும் அராஜகவாத வார்த்தைகள் ஒரு தேசத்திற்குள் ஒரு போராட்டத்தைக் கொண்டுவந்ததில்லை. ஆனால் 1915ல் போரால் உற்பத்திச் செய்யப்பட்ட சிக்கலின் விளைவால் மக்கள் திரளிடையே புரட்சிகரமான எழுச்சி அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது, ருஷ்யாவில் வேலைநிறுத்தங்கள், அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன, இத்தாலியிலும் பிரிட்டனிலும் வேலை நிறுத்தங்கள், ஜெர்மனியில் பட்டினி ஆர்ப்பாட்டங்கள், அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன என்று தெளி வாக உண்மைகள் சுட்டிக்காட்டுகின்றன. இவையெல்லாம் புரட்சிகர மக்கள் போராட்டத்தின் ஆரம்பங்கள் இல்லையா?

**இந்தப் போரில் சமூக-ஜனநாயகவாதிகளின் போர்த்தந்திரங் களின் நடைமுறை உட்பொருள் அனைத்தும் என்னவெனில் மக் களின் புரட்சிகர நடவடிக்கைகளை ஆதரிப்பது, வளர்ப்பது, விரிவு படுத்துவது, கூர்மையடையச் செய்வது, சட்டத்திற்கு மாறான ஸ்தாபனங்களை அமைப்பது** என்பனவாகும். ஏனெனில் அத் தகைய ஸ்தாபனங்கள் இல்லாமல் ''சுதந்திரமான'' நாடு களிலும்கூட மக்கள் திரளுக்கு இந்த உண்மையைக் கூற வேறு வழியில்லை. எவ்வகை சந்தர்ப்பவாத அல்லது அமைதி வாத தத்துவங்களால் அது அலங்கரிப்பட்ட போதிலும்

மற்றது பொய்களாகவோ அல்லது அலங்காரச் சொல்லாக வோ இருக்கும்.*

இத்தகைய "ருஷ்யப் போர்த்தந்திரங்கள்" (டேவிடின் கூற்று) ஐரோப்பாவிற்குப் பொருத்தமானவையல்ல என்று கூறும் பொழுது நாங்கள் வழக்கமாக உண்மைகளைச் சுட்டிக் காட்டிப் பதிலளிக்கிறோம். அக்டோபர் 30ல் பெண் தோழியர்களின் பிரதிநிதிகள் பெர்லின் கட்சியின் தலைமைக் குழுவைச் சந்தித்து, "இப்பொழுது நாம் ஒரு மிகப் பெரிய நிர்வாக இயந்திரத்தைப் பெற்றிருக்கிறோம். சட்டத்திற்கு மாறான சிறு பிரசுரங்கள், துண்டுப் பத்திரிகைகள் ஆகிய வற்றை வினியோகிப்பதும் 'தடை செய்யப்பட்ட கூட்டங் களை' ஏற்பாடு செய்வதும் சோஷலிஸ்டுகளுக்கு எதிரான சட்டத்தின்[21] கீழ் இருந்ததை விட எளிதாக இருக்கிறது.... வழி வகைகளுக்குக் குறைவில்லை; ஆனால் விருப்பம் குறை வாக உள்ளது" என்று கூறினார்கள் (*Berner Tagwacht*,[22] 1915, இதழ் 271).

ருஷ்யக் "குறுங்குழுவாதிகளால்" இந்த மோசமான தோழியர்கள் தவறாக வழி நடத்தப்பட்டார்களா? இந்தத் தோழியர்கள்தான் மக்கள் திரளைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறார்களா? அல்லது லேகினும் காவுத்ஸ்கியுமா? 1915 ஜன வரி 27ம் தேதிய அறிக்கையில் லேகின் "அராஜகவாதக்" கருத்தான தலைமறைவு ஸ்தாபனங்களை அமைப்பதை கோபத் துடன் அடித்து விளாசினார்; அல்லது நவம்பர் 26ல் 10,000

---

* 1915 மார்ச் மாதம் பெர்னில் நடைபெற்ற சர்வதேச மாதர் காங்கிரசில் எங்களது கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிகள் சட்டத்திற்கு மாறான ஸ்தாபனங்களை அமைப் பது முழுக்க முழுக்கத் தேவை என வலியுறுத்தினார்கள். அது நிராகரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் மாதர்கள் இந்த ஆலோசனை யைக் கண்டு நகைத்து, பிரிட்டிஷ் நாட்டின் "சுதந்திரத்தைப்" புகழ்ந்தனர். ஆனால் சில மாதங்களுக்குப் பிறகு *Labour Leader*[20] போன்ற பிரிட்டிஷ் செய்தித்தாள்கள் அச்சிடப்படாத வெறும் தாள்களாக எங்களுக்கு வந்து சேர்ந்தன. பிறகு போலீசாரின் திடீர்ச்சோதனைகள், பிரசுரங்களைக் கைப்பற் றல், கைது செய்தல், பிரிட்டனில் சமாதானத்தைப் பற்றிப் பேசிய — சமாதானத்தைத் தவிர வேறு எதையும் பற்றி அல்ல!—தோழர்கள் மீது சுமத்தப்பட்ட கடுமையான தண்டனைகள் என்பது போன்ற செய்திகள் வந்தன.

பேர் கொண்ட வலிமையான ஆர்ப்பாட்டம் பெர்லினில் நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னால், வீதியில் ஆர்ப் பாட்டங்கள் செய்வதை ''முரட்டுத்துணிச்சல்'' என்று குற்றங்கூறக் கூடிய ஒரு எதிர்ப்புரட்சியாளராக மாறியவர் காவுத்ஸ்கி!!

நம்மிடம் வெற்றுப் பேச்சும் காவுத்ஸ்கி மாதிரியில் மார்க் சியத்தைத் தீய வழியில் பயன்படுத்துவதும் போதுமான அளவு உள்ளன! இரண்டாவது அகிலத்தின் 25 ஆண்டு களுக்குப் பிறகு, பாஸெல் அறிக்கைக்குப் பிறகு, தொழி லாளர்கள் இனி அழகுச் சொற்களை நம்பப் போவதில்லை. சந் தர்ப்பவாதம் பழுத்து அழுகிப் போயிருக்கிறது. அது சமூக-தேசியவெறியாக உருமாற்றப்பட்டு, முதலாளித்துவ முகாமில் இறுதியாகச் சேர்ந்து விட்டது. அது சமூக-ஜனநாயகத் துடன் அதனுடைய ஆன்மீக, அரசியல் பிணைப்புகளைத் துணித்துக் கொண்டுள்ளது. தனது ஸ்தாபன பிணைப்புகளை யும் அறுத்துக் கொள்ளும். தொழிலாளர்கள் ''சட்டத்திற்கு மாறான'' பத்திரிகைகளையும் ''தடை செய்யப்பட்ட'' கூட் டங்களையும் வேண்டுமென கோரிக் கொண்டிருக்கின்றனர். அதாவது மக்கள் திரளின் புரட்சிகர இயக்கத்தை ஆதரிக்கத் தலைமறைவு ஸ்தாபனங்கள் தேவை எனக் கூறுகின்றனர். இந்த வழியில் ''போருக்கு எதிரான போர்'' நடத்தப் பட்டால் மட்டுமே அது வெற்றுப் பேச்சாக இருப்பது நின்று, சமூக-ஜனநாயக வேலையாக மாறும். இன்னல்கள், தற் காலிகமான தோல்விகள், தவறுகள், சரியில்லா கருத்துக் கள், தடைகள் எல்லாம் இருந்தும் கூட இந்த வேலை மனித இனத்தை வெற்றிகரமான பாட்டாளிப் புரட்சிக்கு அழைத்துச்செல்லும்.

*1916 ஜனவரியில்*<br>*Vorbote இதழ் 1ல்*<br>*வெளியிடப்பட்டது*

*வி. இ. லெனின்,*<br>*முழு நூல் திரட்டு,*<br>*ருஷ்யன் பதிப்பு,*<br>*தொகுதி 27ன் படி*<br>*தமிழில் மொழி*<br>*பெயர்க்கப்பட்டது*

## பதிப்பாளர் குறிப்புகள்

[1] இரண்டாவது அகிலம்—சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வ தேசச் சங்கம். இது 1898ல் நிறுவப்பட்டது. ஏகாதிபத்திய சகாப்தம் ஆரம்பித்ததும் அதில் சந்தர்ப்பவாதப் போக்குகள் மேலும் மேலும் தலைதூக்கின. 1914ல் உலக ஏகாதிபத்தியப் போர் தொடங்கிய பொழுது, இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் தங்களது நாடுகளின் முதலாளித்துவ அரசாங்கங்களின் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பகிரங்கமாக ஆதரித்து நின்றனர். இரண்டாவது அகிலம் கலைக்கப்பட்டது.—8.

[2] நால்வர் ஒப்பந்தம்—பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, இத்தாலி ஆகிய ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டணி. இத்தாலி 1915ல் மூவர் ஒப்பந்த நாடுகளிலிருந்து (ஜெர்மன், ஆஸ்திரோ-ஹங்கேரி, இத்தாலி) பிரிந்து மூவர் உடன்பாடு (ஆன்டான்ட்) கூட்டணியுடன் சேர்ந்த பொழுது அது உருவாக்கப்பட்டது.—8.

[3] பாரிஸ் கம்யூன் என்பது வரலாற்றில் முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாக விளங்கும். இது 1871 மார்ச் 18ல் பாரிசில் பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போது ஏற்படுத்தப்பட்டது. மார்ச் 18 முதல் மே28 வரை 72 நாட்கள் பாரிஸ் கம்யூன் நீடித்தது.

இது 1905-07ல் ருஷ்யாவில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைக் குறிப்படுகிறது.—11.

[4] மில்லிரண்டிசம் (அமைச்சரவைவாதம்)— சோஷலிஸ்டுகள் முதலாளித்துவப் பிற்போக்கு அரசாங்கங்களில் பங்கெடுக்கவேண்டும் என்ற சந்தர்ப்பவாதப் போர்த்தந்திரம்.

*1899ல் பிரெஞ்சு சோஷலிஸ்டு மில்லிரான் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்த பொழுது இப்பெயர் தோன்றியது.—12.*

5 *Die Neue Zeit (புதிய காலம்)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தத்துவார்த்த சஞ்சிகை. அது 1883 முதல் 1923 வரை ஷ்டுட்கார்ட்டிலிருந்து வெளிவந்தது. 1917 அக்டோபர் வரை அதன் ஆசிரியராகக் கார்ல் காவுத்ஸ்கியும் பிறகு ஜி. கூனவும் இருந்தனர்.*

*ஏகாதிபத்திய உலகப் போரின் பொழுது (1914-18) அந்தச் சஞ்சிகை மையவாத நிலையைக் கடைப்பிடித்த போதிலும் உண்மையில் சமூக-தேசியவெறியினரை ஆதரித்தது.—14.*

6 **பெர்ன்ஷ்டைனியம்** — *ஜெர்மனியிலும் சர்வதேச சமூக-ஜனநாயகவாதத்திலும் உள்ள மார்க்சியத்திற்கு விரோதமான ஒரு போக்கு. அது ஜெர்மனியில் 19வது நூற்றுண்டு இறுதியில் தோன்றியது. அதனுடைய பெயரை எடுவார்டு பெர்ன்ஷ்டைனிடமிருந்து (1850—1932) பெற்றது. 1896-98ல் பெர்ன்ஷ்டைன் புரட்சிகர மார்க்சியத்தின் தத்துவார்த்த, பொருளாதார, அரசியல் கோட்பாடுகளைத் திருத்தி (இதிலிருந்து திருத்தல்வாதம் எனும் பெயர் தோன்றியது), அதன் இடத்தில் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை இணைக்க, வர்க்கங்கள் ஒத்துழைக்க வேண்டும் எனும் முதலாளித்துவத் தத்துவங்களைப் புகுத்த முயன்றார், பல கட்டுரைகளை எழுதினர். முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது, வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்தை மறுத்து, ''இயக்கமே எல்லாம், இறுதிக் குறிக்கோள் ஒன்றுமில்லை'' எனும் சமூக-திருத்தல்வாத வேலைத்திட்டத்தை அவர் முன்வைத்தார். பெர்ன்ஷ்டைன் கருத்துக்கள் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தில் இருந்த வலதுசாரிகள், இரண்டாவது அகிலத்தின் இதரக் கட்சிகளில் இருந்த சந்தர்ப்பவாதிகள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றன.—15.*

7 *Sozialistische Monatshefte (சோஷலிச மாத இதழ்)— ஜெர்மானிய சந்தர்ப்பவாதிகளின் பிரதான சஞ்சிகை, சர்வதேசத் திருத்தல்வாதிகளின் பத்திரிகைகளில் ஒன்ருகும். 1897 முதல் 1933 வரை பெர்லினில் வெளிவந்தது.—15.*

8 *1884ல் தோற்றுவிக்கப்பட்ட பிரிட்டிஷ் சீர்திருத்தவாத ஸ்தாபனமான ஃபேபியன் கழகத்தின் உறுப்பினர்கள். அக்கழகத்தின் உறுப்பினர்களில் பெரும்பாலோர் முதலாளித்துவ அறிவாளிகள். அவர்கள் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம், சோஷலிஸ்டுப் புரட்சி ஆகியவற்றின் அவசியத்தை மறுத்தார்கள். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுவது என்பது குட்டி சீர்திருத்தங்கள் மூலமும், படிப்படியான சமுதாய மாற்றங்கள் மூலமும் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்திஞர்கள். 1900ல் ஃபேபியன் கழகம் தொழிற்கட்சியில் சேர்ந்தது.*

*முதலாவது உலகப் போரின் பொழுது (1914-18) ஃபேபியன்கள் சமூக-தேசியவெறி நிலையை எடுத்தனர்.—15.*

9 தொழிற்கட்சி (Labour Party) — *தொழிற்சங்கங்களும், சோஷலிச நிறுவனங்களும் குழுக்களும் நாடாளுமன்றத்தில் தொழிலாளர் பிரதிநிதிகளை அமரவைக்கும் நோக்கத்துடன் தொழிலாளர் பிரதிநிதித்துவத்திற்கான குழு என்ற பெயரில் அது 1900ல் நிறுவப்பட்டது. 1906ல் அது தொழிற்கட்சி என்ற பெயரை வைத்துக் கொண்டது. தொழிற்கட்சி சித்தாந்தத்திலும் போர்த்தந்திரங்களிலும் சந்தர்ப்பவாதக் கட்சியாக இருக்கிறது. முதல் உலகப் போரின் பொழுது அதன் தலைவர்கள் சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டனர்.—15.*

10 I. L. P. — Independed Labour Party *(சுயேச்சைத் தொழிற்கட்சி) என்பது பிரிட்டனில் ஒரு சீர்திருத்தவாத ஸ்தாபனம். இது 1893ல் நிறுவப்பட்டது. தொடக்கத்திலிருந்து நாடாளுமன்ற வடிவப் போராட்டம், மிதவாதக்*

கட்சியுடன் நாடாளுமன்றத்தில் பேரம் செய்தல் என்பதில் கவனம் செலுத்திக் கொண்டு, ஒரு முதலாளித்துவ-சீர் திருத்தவாத நிலையை எடுத்தது.

முதல் உலகப் போர் தொடங்கியவுடன் போருக்கு எதிரான அறிக்கை ஒன்றை வெளியிட்டது. ஆனால் விரை வில் சமூக-தேசியவெறி நிலைக்கு நழுவிச் சென்றது.—15.

11 B. S. P. — British Socialist Party *(பிரிட்டிஷ் சோஷ லிஸ்டுக் கட்சி)* என்பது 1911ல் மான்செஸ்டரில் சமூக-ஜனநாயகக் கட்சி மற்ற சோஷலிசக் குழுக்களுடன் ஒன் றுகக் கலந்து நிறுவப்பட்டது. மார்க்சியக் கருத்துக்களைப் பரப்பியது. ''சந்தர்ப்பவாதம் இல்லாததும் உண்மையில் மிதவாதிகளை சார்ந்திராததுமான'' ஒரு கட்சியாக இருந் தது. (பார்க்க: ''ஆங்கிலேய சந்தர்ப்பவாதிகளை அம்பலப் படுத்தல்.'' V. I. Lenin, *Collected Works*, Vol. 19, p. 273). முதலாவது உலக ஏகாதிபத்தியப் போரின் போது அக்கட்சிக்குள் சர்வதேசியப் போக்கிற்கும் ஹைண்ட்மன் தலைமையில் உள்ள சமூக-தேசியவெறிப் போக்கிற்கும் இடையில் ஒரு போராட்டம் வெடித்தது. 1916 ஏப்ரல் மாதத்தில் சால்போர்டில் நடைபெற்ற கட்சியின் ஆண்டு மாநாட்டில் ஹைண்ட்மன் மற்றும் அவருடைய ஆதர வாளர்கள் ஆகியோரின் சமூக-தேசியவெறி நிலை கண்டிக் கப்பட்டது. அவர்கள் கட்சியை விட்டு வெளியேறினர்.

பி. சோ. கட்சியும் கம்யூனிஸ்டு ஒற்றுமை குழுவும் கிரேட் பிரிட்டனின் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதில் தலைமையான பங்காற்றின.—15.

12 நாஷே தேலோ *(நமது குறிக்கோள்)*—ஒரு மாதப் பத் திரிகை. 1914 அக்டோபரில் நாஷா சார்யா *(நமது உதயம்)* என்ற பத்திரிகை நிறுத்தப்பட்ட பின் 1915 ஜனவரியில் இது வெளிவரத் தொடங்கிற்று. நாஷே தேலோ ருஷ்ய சமூக-தேசியவெறியாளர்களின் பிரதானமான ஏடாக இருந்தது.—15.

13 ஒழுங்கமைப்புக் கமிட்டி — ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் மென்ஷிவிக்குகள் எனும் சந்தர்ப்பவாதப்

போக்கின் தலைமை அமைப்பு. இது 1912ல் நிறுவப்பட்டது. முதல் உலகப் போரின் பொழுது ஒழுங்கமைப்புக் கமிட்டி சமூக-தேசியவெறி நிலையை எடுத்து, தேசியவாதம் மற்றும் தேசியவெறி ஆகியவற்றின் கருத்துக்களைப் பிரசாரம் செய்தது; போரில் ஜார் ஆட்சியின் நிலை நியாயமானது என்று ஆதரித்தது.—15.

14 செஹெயீத்ஸே பிரிவு என்பது 4ம் அரசாங்க டூமாவில் நி. செ. செஹெயீத்ஸே தலைமை தாங்கிய மென்ஷிவிக் பிரிவு. முதல் ஏகாதிபத்திய உலகப் போரின் பொழுது டூமாவில் அந்த மென்ஷிவிக் பிரிவு மையவாத நிலையை மேற்கொண்டது. உண்மையிலேயே ருஷ்ய சமூக-தேசிய வெறியாளர்களின் கொள்கைக்கு முழு ஆதரவளித்தது.—15.

15 ஷிரோக்கிகள் *(அகலமானவர்கள்)* — பல்கேரிய சமூக-ஜனநாயகக் கட்சியில் இருந்த சந்தர்ப்பவாதப் போக்கு. 1903ல் அக்கட்சி பிளவுபட்ட பிறகு அவர்கள் சந்தர்ப்பவாதப் போக்குள்ள பல்கேரிய சமூக-ஜனநாயகக் கட்சியை (''அகலமான'' சோஷலிஸ்டுகள்) நிறுவினார்கள். முதல் உலகப் போரின் பொழுது ''ஷிரோக்கிகள்'' சமூக-தேசிய வெறி நிலையில் நின்றனர்.—16.

16 *Prussische Jahrbücher* (பிரஷ்ய ஆண்டு மலர்)—1858 முதல் 1935 வரை பெர்லினிலிருந்து வெளிவந்த அரசியல், வரலாறு, இலக்கியம் ஆகிய பிரச்சினைகள் பற்றிய ஜெர்மன் பழமைவாதப் பத்திரிகை.—17.

17 பார்க்கவும் F. Engels, *Zur Kritik des sozial-demokratischen Programmentwurfes 1891* (பி. எங்கெல்ஸ், 1891ம் ஆண்டின் சமூக-ஜனநாயக வேலைத்திட்ட நகல் பற்றிய விமர்சனம்).—18.

18 பக்கூனின்வாதம் — அராஜகவாதத்தின் சித்தாந்தியாகிய மி. அ. பக்கூனின் என்பவரது பெயரால் அழைக்கப்பட்ட போக்கு. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் உள்ளிட்டு

எல்லா வகை அரசையும் மறுப்பதும் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாமையும் பக்கூனின்வாதத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். பக்கூனின்வாதிகளின் எண்ணப்படி ''தலைசிறந்த'' நபர்களைக் கொண்ட இரகசியப் புரட்சி சங்கம் மக்களின் கலக எழுச்சிகளுக்குத் தலைமை வகித்து நடத்த வேண்டும். சதிகளும் திடீர் கலகங்களும் பயங்கர செயல்களும் கொண்ட அவர்களுடைய போர்த்தந்திரங்கள் குருட்டுச் சாகசமாகவும் புரட்சி பற்றிய மார்க்சியத் தத்துவத்திற்கு விரோதமானதாகவும் இருந்தன.—22.

19 ஸிம்மர்வால்டு இடதுசாரிகளின் குழு — 1915 செப்டம்பரில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டு மாநாட்டில் லெனின் முன்முயற்சியினால் நிறுவப்பட்டது. லெனினால் தலைமை தாங்கப்பட்ட அது, மாநாட்டில் பெரும்பான்மையாக இருந்த மையவாதிகளை எதிர்த்துப் போராடியது; ஏகாதிபத்தியப் போரைக் கண்டனம் செய்து சமூக-தேசிய வெறியாளர்களின் துரோகத்தை அம்பலப்படுத்திய நகல் தீர்மானத்தையும் அறிக்கையையும் முன்வைத்தது போரை எதிர்த்து தீவிரமாகப் போரிட வேண்டும் என்று ஸிம்மர்வால்டு இடதுசாரிகள் வற்புறுத்தினர். அவர்கள் ஜெர்மனில் *Vorbote* (முன்னோடி) எனும் சஞ்சிகையை வெளியிட்டார்கள். அதில் லெனினால் எழுதப்பட்ட பல கட்டுரைகள் வெளிவந்தன.

ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழுவில் போல்ஷிவிக்குகள் பிரதான பாத்திரத்தை வகித்தனர். அவர்கள் மட்டுமே முற்றிலும் முரண்பாடற்ற சர்வதேசியவாத நிலையைப் பின்பற்றினர்.—25.

20 *The Labour Leader* (தொழிலாளர் தலைவர்) — 1891ல் நிறுவப்பட்ட ஒரு வாரப் பத்திரிகை. 1893 முதல் அது பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சியின் பிரதான பத்திரிகையாகும். 1946 முதல் அது *Socialist Leader* (சோஷலிசத் தலைவர்) என்ற பெயரில் வெளிவருகிறது.—26.

21 சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம் என்பது *1878ல் ஜெர்மனியில் பிஸ்மார்க்கு அரசாங்கத்திஞல் நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர், சோஷலிஸ்டு இயக்கத்திற்கு எதிராகப் போராடுவது அதன் நோக்கம் ஆகும். அதன்படி சமூக-ஜனநாயகக் கட்சியின் எல்லா அமைப்புகளும் தொழிலாளர் வெகுஜன ஸ்தாபனங்களும் தொழிலாளர் பத்திரிகைகளும் தடை செய்யப்பட்டன; சோஷலிஸ்டு நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன; சமூக-ஜனநாயகவாதிகள் வேட்டையாடி நாடுகடத்தப்பட்டனர். 1890ல் அதிகரித்து வந்த தொழிலாளர் இயக்கத்தின் காரணமாக அது ரத்து செய்யப்பட்டது.—26.*

22 *Berner Tagwacht (பெர்ன் காவற்காரன்)—1893லிருந்து பெர்னில் சுவிட்சர்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சியின் பத்திரிகையாக வெளிவருகிறது. முதல் உலகப் போரின் தொடக்கத்தில் அதில் லீப்க்னெஹ்ட், மேரிங் மற்றும் இதர இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் கட்டுரைகள் வெளிவந்தன. 1917லிருந்து அந்தப் பத்திரிகை, சமூக-தேசியவெறியாளர்களுக்குப் பகிரங்கமாக ஆதரவு அளித்தது.—26.*

## பெயர்க் குறிப்பகராதி

அக்செல்ரோத், பாவெல் பரீசவிச் *(1850—1928)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக் (ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாதிகளுக்கிடையே குட்டி முதலாளித்துவச் சந்தர்ப்பவாதப் போக்கைப் பின்பற்றியவர்). உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார்.—13, 21, 22, 23, 24, 25.

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)*—விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூலவர்களில் ஒருவர். கார்ல் மார்க்சின் நண்பரும் தோழருமாக இருந்தார். சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினரின் தலைவர், ஆசான்.—18, 20.

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854—1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். முதலில் மார்க்சியவாதியாக இருந்தார். 1910க்குப் பிறகு மார்க்சியத்தைத் துறந்துவிட்ட ஓடுகாலி. அவர் மிகவும் அபாயகரமான சந்தர்ப்பவாதப் போக்காகிய மையவாதத்தின் சித்தாந்தி.—8, 11, 12, 13, 18, 19, 20, 21, 23, 25, 26, 27.

கிரிச்சேவ்ஸ்கி, பரீஸ் நவூமவிச் *(1866—1919)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, சந்தர்ப்பவாதி. 1903ல் சமூக-ஜனநாயகவாத இயக்கத்தை விட்டு விலகினர்.—22.

கிரேய்லிஹ் [Greulich], ஹெர்மன் *(1842—1925)*—சுவிஸ் சமூக-ஜனநாயகக் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர்,

*அதன் வலதுசாரிப் பிரிவின் தலைவர், நடப்புச் செய்தி எழுத்தாளர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார்.—16.*

கெட்டு [Guesde], ஜூல் (பசில், மட்டியே) *(1845—1922)— பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் அமைப்பாளர்கள், தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போர் தொடங்கிய பிறகு அவர் சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டு பிரான்சின் முதலாளித்துவ அரசாங்கத்தில் பதவி வகித்தார்.—12, 13.*

கோல்ப் [Kolb], வில்ஹெல்ம் *(1870—1918)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, தீவிரமான சந்தர்ப்பவாதியும் திருத்தல்வாதியும் ஆவார். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார்.—22, 24.*

சுடெக்கும் [Südekum], அல்பேர்ட் *(1871—1944)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. 1900-18ல் ரெயிஹ்ஸ்டாக் உறுப்பினராக இருந்தார். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார். காலனிப் பிரச்சினை பற்றி ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்தைப் பிரசாரம் செய்தார். தொழிலாளர் வர்க்கப் புரட்சி இயக்கத்திற்கு எதிராகப் போராடினார்.—22.*

செம்பா [Sembat], மர்சேல் *(1862—1922)—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களின் ஒருவர், பத்திரிகையாளர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார். 1914 ஆகஸ்டு முதல் 1917 அக்டோபர் வரை பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார்.—18.*

**செஹெயீத்ஸே, நிக்கலாய் செமியோனவிச்** *(1864—1926)*—*ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் சந்தர்ப்பவாதப் பிரிவின் (மென்ஷிவிக்குகள்) தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது மையவாத நிலையில் நின்ற போதிலும் உண்மையில் சமூக-தேசியவெறிக் கொள்கையை ஆதரித்தார்.—15.*

**டுரூல்ஸ்டிரா** [Truelstra], **பீட்டர் இயெலஸ்** *(1860—1930)*—*டச்சு சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை நிறுவிய (1894) தலைவர்களில் ஒருவர். இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தீவிரச் சந்தர்ப்பவாத நிலைக்கு மாறி விட்டார். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது ஜெர்மனிக்கு சாதகமான தேசியவெறி நிலையை மேற்கொண்டார்.—15.*

**டேவிட்** [David], **எடுவார்டு** *(1863—1930)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதத்தின் வலதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி, பொருளாதாரவாதி. ஜெர்மன் சந்தர்ப்பவாத Sozialistische Monatshefte என்ற சஞ்சிகையை நிறுவியவர்களில் ஒருவர். 1903 லிருந்து ரெயிஹ்ஸ்டாக் உறுப்பினராக இருந்தார். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார்.* **உலகப் போரில் சமூக-ஜனநாயகவாதம்** *(1915) எனும் தனது நூலில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் ஏகாதிபத்தியப் போரில் பின்பற்றி வந்த சந்தர்ப்பவாதக் கொள்கையை ஆதரித்தார்.—16, 21, 22, 23, 24, 25, 26.*

**நாவுமன்** [Naumann], **பிரீட்ரிஹ்** *(1860—1919)*—*ஜெர்மன் அரசியல்வாதி, நடப்புச் செய்தி எழுத்தாளர். உழைப்பாளி மக்கள், நிலவி வரும் ஆட்சி அமைப்புடன் இணக்கமாக இருக்க வேண்டும் என்று பிரசாரம் செய்தார். பேரரசருக்கு முழு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதை ஆதரித்தார்.—22.*

**பக்கூனின், மிஹயீல் அலெக்சாந்தரவிச்** *(1814—1876)—அராஜகவாதக் கொள்கைவாதிகளில் ஒருவர்.—22, 25.*

**பிரான்டிங்** [Branting], **கார்ல் யால்மார்** *(1860—1925)—ஸ்வீடன் சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர், இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசிய வெறியாளராக இருந்தார்.—15.*

**பிரியாண்டு** [Briand], **அரிஸ்தீத்** *(1862—1932)—பிரெஞ்சு அரசு பதவியாளர். 1909-31ல் பல தடவை பிரான்சின் பிரதமராகவும் அயல்துறை அமைச்சராகவும் இருந்தார்.—22.*

**பிளெஹானவ், கியோர்கி வலென்தீனவிச்** *(1856—1918)—ருஷ்ய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர். ருஷ்யாவில் முதன்முதலில் மார்க்சியத்தைப் பரப்பியவர். 1903 முதல் மென்ஷிவிக் ஆவார். (ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கைப் பின்பற்றியவர்.) உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறி நிலையில் இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் பால் எதிர்மறைப் போக்கை அனுசரித்தார். ஆனல் சோவியத் ஆட்சியதிகாரத்திற்கு எதிரான போராட்டத்தில் பங்கெடுக்கவில்லை.—13, 16, 24, 25.*

**பிஸ்ஸொலாட்டி** [Bissolati], **லியனீடா** *(1857—1920)—இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவியவர்களிலும் அதன் தீவிர வலதுசாரிச் சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர்களிலும் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார். இத்தாலி ஆன்டான்ட் நாடுகளின் பக்கத்தில் போரில் பங்கெடுக்க வேண்டும் என்று கருதினர்.—15.*

**மார்த்தினவ், அ. (பிக்கர், அலெக்சாந்தர் சமோய்லவிச்** *(1865—1935) — ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் இருந்த மென்ஷிவிசம் எனும் சந்தர்ப்பவாதப் போக்கின் முக்கியமான பிரதிநிதி. பிற்பாடு கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தவர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது மைய வாத நிலையில் இருந்தார்.—22.*

**மார்க்ஸ் [Marx], கார்ல்** *(1818—1883)—விஞ்ஞானக் கம்யூனி சத்தின் மூலவர். சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினரின் தலைவரும் ஆசானும் ஆவர்.—21.*

**மானிட்டர் [Monitor]**—*ஒரு புனைபெயர். அதைக் கொண்டு ஒரு ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, ஒரு சந்தர்ப்ப வாதி, Preussische Jahrbücher [பிராஷ்ய ஆண்டு மலர்] என்ற பழமைவாத சஞ்சிகையில் 1915 ஏப்ரலில் ஒரு கட்டுரையை வெளியிட்டார். அதன் ஆசிரியர் சமூக-ஜனநாயகக் கட்சிகளின் மையவாதத் தனத்தைப் பாராட்டி அதை நீடித்துப் பாதுகாக்க வேண்டும் என்று எழுதினர். அதனல் சந்தர்ப்பவாதிகள் ''இடதுசாரி'' வார்த்தைகளைக் கொண்டு முதலாளித்துவ வர்க்கத் தினருடன் ஒத்துழைக்கும் தமது கொள்கையை மேற் கொள்ள முடியும்.—17, 18, 19.*

**மில்யுக்கோவ், பாவெல் நிக்கலாயெவிச்** *(1859—1943)— ருஷ்யாவில் முதலாளித்துவ மிதவாத-முடியாட்சிக் கட்சியாகிய காடேட்டுக் கட்சியின் தலைவர், வரலாற் ருசிரியர், நடப்புச் செய்தி எழுத்தாளர்.—22.*

**மில்லிரான் [Millerand], அலெக்சாண்டர் எட்டியேன்** *(1859— 1943)—பிரெஞ்சு அரசியல்வாதி. 1900ம் ஆண்டு களில் சோஷலிஸ்டுகளுடன் கூடி, பிரெஞ்சு சோஷலிச இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கிற்குத் தலைமை தாங்கினர். 1899ல் பிற்போக்கு முதலாளித்துவ அர சாங்கத்தில் சேர்ந்தார். அதில் பாரிஸ் கம்யூனின் கொலை பாதகனுகிய ஜெனரல் கலிபேயுடன் ஒத்துழைத்தார்.*

*1909-10, 1912-13, 1914-15ம் ஆண்டுகளில் வெவ்வேறு அமைச்சர் பதவிகள் வகித்தார்.—15.*

**ரெனெடேல்** [Renaudel], **பியேர்** *(1871—1935)—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார். தனது தேசிய வெறியைஅமைதிவாதச் சொற்களால் மறைத்தார்.—18.*

**லாயிட் ஜார்ஜ்** [Lloyd George], **டேவிட்** *(1863—1945)—ஆங்கிலேய அரசு பதவியாளர், அரசுறவுத் துறையாளர். மிதவாத (லிபெரல்) கட்சியின் தலைவர். 1916-22ல் பிரதமராக இருந்த பொழுது சமீப மற்றும் மத்தியக் கிழக்கு, பால்கன் ஆகிய பிரதேசங்களில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் நிலைமைகளைத் திடப்படுத்துவதில் ஈடுபட்டார். காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் தேசிய-விடுதலை இயக்கங்களைக் கொடிய முறையில் நசுக்குவதில் பங்காற்றினர்.—18, 21.*

**லீப்க்னெஹ்ட்** [Liebknecht], **கார்ல்** *(1871—1919) — ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலை சிறந்த பிரதிநிதி. 1912ல் ரெயிஹ்ஸ்டாக் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது அவர், கொள்ளைப் போரில் "தங்களது சொந்த" அரசாங்கங்களை ஆதரிக்க வேண்டாம் என்று கூறி ஊக்கத்துடன் போராடினர். 1914 டிசம்பர் 2ல் ரெயிஹ்ஸ்டாகில் அவர் ஒருவரே போர் கடன்களுக்கு எதிராக வாக்களித்தார். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர். 1919ல் எதிர்ப்புரட்சியாளர்கள் அவரைப் படுகொலை செய்தார்கள்.—19, 24.*

**லேகின்** [Legien], **கார்ல்** *(1861—1920)—ஜெர்மன் வலது சாரி சமூக-ஜனநாயகவாதி, ஜெர்மன் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. 1893 முதல்*

*1920 வரை பல தடவைகள் ரெயிஹ்ஸ்டாகில் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக இருந்தார். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார்.—15, 16, 18, 21, 22, 23, 26.*

**வண்டர்வேல்டே** [Vandervelde], **எமீல்** *(1866—1938)—பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர்; இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் தலைவர். தீவிரச் சந்தர்ப்பவாத நிலையில் நின்றவர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறியாளராக இருந்தார். முதலாளித்துவ அரசாங்கங்களில் சேர்ந்து பல வகை அமைச்சர் பதவிகளை வகித்தார்.—8, 23.*

**வில்ஹெல்ம், இரண்டாவது (ஹோஹென்சோலர்ன்)** [Hohenzollern] *(1859—1941)—ஜெர்மன் பேரரசர், பிரஷ்யாவின் அரசர் (1888—1918).—20.*

**வுர்ம்** [Wurm], **எம்மனுயில்** *(1857—1920)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. 1890லிருந்து ரெயிஹ்ஸ்டாக் உறுப்பினராக இருந்தார். 1902-17ல் Die Neue Zeit என்ற சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போரின் (1914-18) பொழுது மையவாதியாக இருந்தார்.—19.*

**வெப்** [Webb], **சிட்னி** *(1859—1947)—ஆங்கிலேயப் பிரமுகர், சீர்திருத்தவாதி. தனது மனைவி பியாட்ரீஸ் வெபுடன் சேர்ந்து ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு, தத்துவம் ஆகியவற்றைப் பற்றி பல நூல்களை எழுதினர். அந்த நூல்களில் அவர், முதலாளித்துவக் கட்டுக்கோப்பினுள்ளே அமைதியான வழியில் தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று போதனை செய்தார். சீர்திருத்தவாத ஃபேபியன் கழகத்தை நிறுவியவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப்*

*போரின் (1914-18) பொழுது சமூக-தேசியவெறி நிலை யில் இருந்தார்.—16, 21.*

**வெப்** [Webb], **பியாட்ரீஸ்** *(1858—1943)—ஆங்கிலேயப் பிரமுகர்.—21.*

**ஸோர்கே** [Sorge], **பிரெடெரிக் அடோல்ப்** *(1828—1906)—சர்வதேச மற்றும் அமெரிக்கத் தொழிலாளர், சோஷலிஸ்டு இயக்கங்களின் பிரமுகர். மார்க்சியத்தின் பிரசாரகர். மார்க்ஸ் எங்கெல்சின் நண்பரும் தோழருமாக இருந்தார்.—20.*

**ஹைண்ட்மன்** [Hyndman], **ஹென்ரி மாயர்ஸ்** *(1842—1921)—ஆங்கிலேய சமூக-சீர்திருத்தவாதி. பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1916ல் சால்போர்டில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் அவரது சமூக-தேசியவெறி நிலை கண்டிக்கப்பட்ட பிறகு அவர் கட்சியை விட்டு விலகினார்.—16, 23.*

## வாசக நேயர்களுக்கு

*இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.*

*கடிதங்களைத் தயைசெய்து* "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

C 030

**В. И. Ленин**

ОППОРТУНИЗМ
И КРАХ II ИНТЕРНАЦИОНАЛА

*на тамильском языке*

**V. I. Lenin**

OPPORTUNISM AND THE COLLAPSE
OF THE SECOND INTERNATIONAL

*In Tamil*